# தேசிய அரசுப் பேரவையின்

# 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க,

# தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபைச் சட்டம்

(1974, பெப்புரவரி 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

22 APR 1974

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

# 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபைச் சட்டம்

ச. வ.— ஓ. 44/68

**தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபை என அறியப்படும் பகிரங்க அதிகாரசபை ஒன்றினைத் தாபிப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்வினைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையினாற் பின்வருமாறு சட்டம் ஆக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் ; இது கசற்றில் வெளியிடப்படுங் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய (இச்சட்டத்தில் " நியமித்த தேதி " எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வரும். சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வருந்தேதியும்.

## பாகம் I

## தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபை

**2.** (இச்சட்டத்தின்கண் இனிமேல் " சபை " எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபை என அழைக்கப்படவேண்டிய பகிரங்க அதிகாரசபை ஒன்று, நியமித்த தேதியன்று அல்லது அதன் பின்னர் கூடிய விரைவில் தாபிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அது 5 ஆம் பிரிவின்கீழ் அப்போதைக்குச் சபையின் உறுப்பினராயிருக்கும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும். தேசிய நீர் வழங்கல், வடிகால் சேவைகள் சபை.

**3.** சபையானது, 2 ஆம் பிரிவினால் அதற்கொதுக்கப்பட்ட பெயர் கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டுமென்பதோடு, அது இடையறு வழியுரிமையும், பொது இலச்சினையொன்றும் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குவைக்கலாம், அதற்கெதிராக வழக்குவைக்கவும்படலாம். சபையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல்.

**4.** பின்வருவன சபையின் குறிக்கோள்களாதல் வேண்டும் :— சபையின் குறிக்கோள்கள்.

(அ) இச்சட்டத்தின் கீழ் அதற்களிக்கப்பட்ட அல்லது அதன் மேற் சுமத்தப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் அதன் அதிகார இடப்பரப்பினுள் அல்லது இடப்பரப்புகளுள் பிரயோகித்தல், நிறைவேற்றுதல், புரிதல் ; அத்துடன்

(ஆ) இப்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறுன அல்லது உகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தல்.

2—எ 01632—867 (10/73)

சபையின் அமைப்பு.

5. (1) சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பொறியியல், நிதி, பொதுமக்கள் சுகாதாரம், நிருவாகம் அல்லது சட்டம் என்பவற்றுள் ஏதாவதொன்றில் பரந்த அனுபவமுடையவர்களெனவும் ஆற்றலுள்ளவர்களெனவும் அமைச்சருக்குத் தோற்றும் ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர் நால்வர் ;

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(இ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும், பொதுத் திறைசேரியின் அலுவலராகவிருக்கும் உறுப்பினர் ஒருவர் ;

(ஈ) திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவ்வமைச்சின் அலுவலரொருவராகவுள்ள உறுப்பினர் ஒருவர் ;

(உ) சுகாதார அமைச்சிற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவ்வமைச்சின் அலுவலரொருவராகவுள்ள உறுப்பினர் ஒருவர்.

அமைச்சரால் நியமிக்கப்படும் உறுப்பினரொருவர் இச்சட்டத்தில் " நியமன உறுப்பினர் " எனக் குறிப்பீடு செய்யப்படுவர்.

(2) அமைச்சரானவர் சபையின் நியமன உறுப்பினர்களிடையேயிருந்து சபையின் தவிசாளரை நியமித்தல் வேண்டும் என்பதுடன், துணைத்தவிசாளர் ஒருவரையும் நியமிக்கலாம்.

(3) ஆளொருவர்—

(அ) தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினரொருவராக அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது இனிமேல் அத்தகையவராக வரின் ; அல்லது

(ஆ) சபையின் ஊழியரொருவராக இருப்பின் அல்லது இனிமேல் அத்தகையவராக வரின்,

அவர், சபையின் உறுப்பினரொருவராயிருப்பதற்கு அல்லது சபையின் உறுப்பினரொருவராகத் தொடர்ந்து இருந்துவருதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

(4) சபையினால் செய்து கொள்ளப்பட்ட அல்லது செய்துகொள்ள உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தமெதிலும் எவ்வகையிலேனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள சபையின் உறுப்பினர் ஒருவர், சபையின் கூட்டமொன்றில் தமது அக்கறையின் தன்மைபற்றி வெளிவிடுதல் வேண்டும் ; அத்துடன், அத்தகைய வெளிவிடுகை சபையின் கூட்டக்குறிப்பில் பதியப்படுதல் வேண்டுமென்பதோடு, அவ்வுறுப்பினர் அந்தவொப்பந்தந் தொடர்பில் சபை நிகழ்த்தும் கலந்துரையாடலில் அல்லது அது செய்து கொள்ளும் முடிவில் பங்கு கொள்ளுதலுமாகாது.

(5) அமைச்சரானவர், சபையின் பணிகளைத் திறமையாகப் புரிவ தற்கு அவசியமானதெனக் கருதின், கசற்றில் வெளியிடப்படுங் கட்டளை மூலம், காரணங் கூறாது, சபையின் நியமன உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து நீக்கலாம்.

(6) சபையின் நியமனவுறுப்பினர் ஒருவர், அமைச்சருக்கு முக வரியிடப்பட்ட கடிதமூலம் எந்நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(7) உடல்நலமின்மை அல்லது இலங்கையிலில்லாமை காரண மாக அல்லது வேறேதேனும் காரணத்திற்காகச் சபையின் தவி சாளர், துணைத் தவிசாளர் அல்லது வேறு யாரேனும் நியமன வுறுப்பினர் தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறை வேற்ற முடியாதவராயின், அமைச்சரானவர், ஓராமுட்பிரிவின் ஏற் பாடுகளை முறைப்படி கவனித்து, விடயத்திற்கேற்றுற் போல தவிசாளராக, துணைத் தவிசாளராக அல்லது உறுப்பினராக அவரது இடத்திற் செயற்படவென வேறொருவரை நியமிக்கலாம்.

(8) சபையின் நியமனவுறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் தாமாகவே முன்னதாகப் பதவியை வறிதாக்கினுலொழிய, ஐந் தாண்டுகள் கொண்டவொரு காலத்திற்குப் பதவி வகிப்பார் ;

எனினும், சபையின் நியமனவுறுப்பினர் ஒருவரின் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பவென அமைச்சரினுல் நியமிக்கப் பட்ட உறுப்பினர் ஒருவர், அவர் எந்த உறுப்பினரின் பதவிக்கு வந்தாரோ, அந்தவுறுப்பினரின் முடிவுறுதிருக்கும் பதவிக்காலம் வரை பதவி வகிப்பார்.

(9) பதவியை வறிதாக்கும் சபையின் நியமனவுறுப்பினர் எவ ரும் மீளவும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவார்.

(10) சபையின் நியமனவுறுப்பினரொருவர்—

(அ) தமது விலகலை அமைச்சருக்கு அறிவிக்குமிடத்து ; அல்லது

(ஆ) அவரது பதவியிலிருந்து அமைச்சரால் அகற்றப்படு மிடத்து ; அல்லது

(இ) உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருந்துவருவ தற்குத் தகைமையற்றவராகுமிடத்து ; அல்லது

(ஈ) அவரது பதவிக்காலம் முடிவடையுமிடத்து,

பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(11) சபையின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிட மிருந்ததென்ற, அல்லது உறுப்பினர் நியமிக்கப்பட்டதில் அல்லது அவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருந்ததென்ற காரணத்தினுல் மட்டும் சபையின் செயலெதுவும் அல்லது நட வடிக்கையெதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

6. (1) சபையின் இலச்சினையானது சபையின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும். சபையின் இலச்சினை.

(2) சபையின் இலச்சினை, சபையாற்றீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய மாதிரியாக மாற்றப்படலாம்.

(3) சபையின் இலச்சினை பொறித்தமை, சபைத் தவிசாளரது ஒப்பத்தினாலும், அல்லது அத்தகைய இலச்சினையைப் பொறித்தலை உறுதிப்படுத்தவெனச் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் வேறு யாரேனுமுறுப்பினரது ஒப்பத்தினாலும் சபையின் வேறோர் உறுப்பினரது ஒப்பத்தினாலும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும் ; அவ்விருவரும் அவணிருந்தனர் என்பதற்கடையாளமாக அந்தச் சாதனத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

*சபை உறுப்பினரின் ஊதியம்.*

7. நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சராற்றீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதமாகவும் அத்தகைய விகிதங்களிலும் சபையின் உறுப்பினர்களுக்கு ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, அவர்கள் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கமைந்தவர்களாதலும் வேண்டும்.

*கூட்டங்களில் தலைமை தாங்கல்.*

8. சபையின் தவிசாளரானவர், சபைக் கூட்டங்களெல்லாவற்றிலும் தலைமை தாங்குதல் வேண்டும். சபையின் எதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயிருக்கவில்லையாயின், சபையின் துணைத் தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டும். சபையின் எதேனும் கூட்டத்தில் தவிசாளரும் துணைத் தவிசாளரும் சமுகமாயிருக்கவில்லையாயின், அங்கு கூடியிருக்கும் உறுப்பினர்கள் அக்கூட்டத்திற்குத் தலைமைதாங்கவெனத் தம்முள் ஒருவரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

*கூட்டநடப்பெண்.*

9. சபைக் கூட்டமெதற்குமான கூட்ட நடப்பெண் மூன்றாதல் வேண்டும்.

*சபைக்கூட்டங்கள்.*

10. (1) சபை முன்னர் ஆலோசனைக்கென வரும் ஒவ்வொரு பிரச்சினையும் சபைக் கூட்டமொன்றில் கையாளப்படுதல் வேண்டும் ; அத்துடன் அது அங்கு சமுகமாயிருந்து வாக்களிக்கும் சபையுறுப்பினரின் பெரும்பான்மையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபைக் கூட்டமொன்றில் ஆலோசனைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட எதேனும் பிரச்சினையின்மீதான வாக்களிப்பின் போது வாக்குகள் சமமாயிருக்கும் விடயத்தில், அக்கூட்டத் தவிசாளருக்கு அவரது மூலவாக்கோடு மேலதிக அறுதியிடும் வாக்கொன்றும் இருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது அதன் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

*சபையின் தலைமை அலுவலகம்.*

11. சபையின் தலைமை அலுவலகம், அமைச்சரின் ஒருப்பாட்டுடன் சபை தீர்மானிக்கக்கூடியவாறான, இலங்கையிலுள்ள அத்தகைய இடத்தில் இருத்தல் வேண்டும்.

*சபைக்கு அமைச்சரின் பணிப்புகள்.*

12. அமைச்சரானவர், சபையுடன் கலந்து ஆலோசனை செய்த பின்னர், தேசிய நலனைத் தாக்கும் என அவருக்குத் தோற்றும் கருமங்கள் தொடர்பில், சபையின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தல், நிறைவேற்றல், புரிதல் என்பவை பற்றி சபைக்கு எழுத்தில் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்களைக் கொடுக்கலாம் ; அத்துடன் சபையானது அத்தகைய பணிப்புக்களுக்குப் பயன் கொடுத்தலும் வேண்டும்.

13. சபையின் எல்லா உறுப்பினர்களும் தண்டனைச் சட்டக் கோவையின் கருத்தெல்லைக்குள்ளும், அதன் நோக்கங்களுக்காகவும் அரச அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும். சபையின் உறுப்பினர்கள் அரச அலுவலர்களாகக் கருதப்படுதல்.

14. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் சபையானது ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும். இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் சபையானது ஓர் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.

## பாகம் II

## சபையின் அதிகார இடப்பரப்புகளும், தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பனவும்

15. (1) அமைச்சரானவர், உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அக்கட்டளையிற் குறிப்பிடப்படக் கூடியவாறான இலங்கையிலுள்ள ஏதேனும் அத்தகைய இடப் பரப்பைச் சபையின் அதிகார இடப்பரப்பென வெளிப்படுத்தலாம். சபையின் அதிகார இடப்பரப்புகள்.

(2) ஓராமுட்பிரிவின் கீழான கட்டளையொன்று எந்த இடப் பரப்புத் தொடர்பில் ஆக்கப்பட்டதோ அந்த ஏதேனும் இடப் பரப்பு, ஓர் உள்ளூரதிகாரசபையின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளூரதிகாரசபைகளின் முழு அளவிலான அல்லது ஏதேனும் பகுதியளவிலான நிருவாக எல்லைகளை உள்ளடக்கலாம்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அமைச்சராலாக் கப்பட்ட கட்டளை எதுவும், அது கசற்றில் வெளியிடப்படும் அத்தகைய தேதியன்று அல்லது அதன்கண் குறிப்பிடப்படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

16. (1) சபையின் ஒவ்வோர் அதிகார இடப்பரப்பிலும்— சபையின் அதிகார இடப்பரப்புகளுள் அதன் பொதுக் கடமைகள்.

(அ) திறமையான, ஒருங்கிணைந்த நீர்வழங்கல் சேவையை அபிவிருத்தி செய்தல், ஏற்பாடு செய்தல், செயற்படுத்துதல், கட்டுப்படுத்துதல் ; அத்துடன் பகிரங்க, வீட்டு அல்லது கைத்தொழில் நோக்கங்களுக்காக நீரை விநியோகித்தல் ;

(ஆ) திறமையான ஒருங்கிணைந்த சாக்கடைச் சேவைத் தொகுதியைத் தாபித்தல், அபிவிருத்தி செய்தல், செயற்படுத்துதல், கட்டுப்படுத்தல் என்பன ;

(இ) 57 ஆம் பிரிவின் கீழ் சபைக்கு மாற்றப்பட்ட ஏதேனும் நீர்வழங்கல் அல்லது சாக்கடைச் சேவை பொறுப்பு முயற்சியினைக் கையேற்றலும் கொண்டு நடாத்தலும் ;

(ஈ) தன்னிச்சையான மாற்றற் கட்டளைமூலம் அல்லது வலுக் கட்டாய மாற்றற் கட்டளைமூலம் 64 ஆம் பிரிவின் கீழ் சபைக்கு மாற்றப்பட்ட ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் ஏதேனும் நீர்வழங்கல் அல்லது சாக்கடைச் சேவை பொறுப்பு முயற்சியினைக் கையேற்றலும் கொண்டு நடாத்தலும் ;

(உ) நீர்வழங்கலை ஏற்பாடு செய்து ஏதேனும் உள்ளூரதிகார சபைக்கு அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத் திற்கு, அல்லது வேறு ஏதேனும் தாபனத்திற்கு அல் லது நிறுவனத்திற்கு அல்லது யாரேனும் தனியாளுக்கு நீரைப் பகிர்ந்தளித்தல் அல்லது மொத்தமாகவோ வேறுவிதமாகவோ நீரை விற்றல் ; அத்துடன்

(ஊ) மேற்சொல்லப்பட்ட நோக்கங்களுக்கு அவசியமாகக் கூடிய மற்றெல்லாச் செயல்களையும் அலுவல்களையும் செய்தல்,

என்பன சபையின் கடமைகளாதல் வேண்டும்.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் முன்னரான நடவடிக்கைகளினால் நடைமுறைக்கிடப்படக்கூடிய தான எவ்விதக் கடமையோ அல்லது பொறுப்போ, அதற்குச் சபை மற்றப்படி அமைவதல்லதாயின், இப்பிரிவிலுள்ள எதன்மூலமும் நேரடியாகவோ மறைமுகமாகவோ சபையின் மீது சுமத்தப்படுவதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

(3) சபையின் பணிகளைப் புரிவதற்காக இலங்கையின் எப்பா கத்திலேனும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேலைகளை நிறைவேற்றுவதிலிருந்து இப்பிரிவிலுள்ளது எதுவும் சபையினைத் தடைசெய்யாது.

**சபையின் தத்துவங்கள்.**

17. பின்வருந் தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற் றுள் எதனையும் சபையானது பிரயோகிக்கலாம் :—

(அ) தொகையளவில் நீரைக் கொள்வனவு செய்தல் ;

(ஆ) நீர்வழங்கல், சாக்கடைச் சேவைகளை ஏற்பாடு செய்தல், அபிவிருத்தி செய்தல், பேணிவருதல் என்பன தொடர்பி லான ஆய்வுகளை முற்றுவித்தலும், தரவுகளைச் சேகரித் தலும் பதிதலும் ;

(இ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத் தல், அடமானம் வைத்தல் அல்லது விற்றல் அல்லது வேறுவிதமாக உரித்துமாற்றல் ;

(ஈ) சபையின் கடமைகளைப் புரிவதற்காகவும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காகவும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் நேரடியாக அல் லது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர்மூலம் செய்து கொள்ளலும், அவற்றைப் புரிதலும் ;

(உ) சபையினால் வேலைக்கமர்த்தப்பட்ட ஆட்களின் திறமையினை அல்லது சபையினது உபகரணங்களின் வினைத்திறமை யினை முன்னேற்றும் நோக்கத்திற்காக அல்லது அவ் வுபகரணங்கள் இயக்கப்படும் முறையினை மேம்படுத்தும் நோக்கத்திற்காக அவசியமான எதனையும் செய்தல் ;

(ஊ) நீர்வழங்கல், சாக்கடைச் சேவைகளை ஏற்பாடு செய்தல், அபிவிருத்தி செய்தல், பேணி வருதல் என்பனவற்றைப் பற்றிய கருமங்களில் ஆராய்ச்சி நடாத்துதல் ;

(எ) சபையினது வேலையை நிறைவேற்றற்குரிய ஆட்களுக்குப் பயிற்சியளித்தற்கான வசதிகளை ஏற்பாடு செய்தல் ; இது மேற்சொன்ன வசதிகளுக்காக ஏதேனும் குழுவுடன் அல்லது முகவர் நிலையத்துடன சபையினாற் செய்து கொள்ளப்படும் ஒழுங்குகளையும் அடக்கும் ;

(ஏ) சபையினால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களுக்காக சகாய நிதியங்களையும் ஒய்வூதிய நிதியங்களையும் தாபித்தல் ; அத்துடன் அவர்களுக்கு நலன்புரி, பொழுது போக்கு வசதிகளையும், வீடுகள், விடுதிகள், அவை போன்ற வேறு தங்கிடங்கள் என்பவற்றையும் ஏற்பாடு செய்தல் ;

(ஐ) இச்சட்டத்தின் IV ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபையினது அலுவலர்கள், சேவையாளர்கள் என்போரது நியமனம், பதவியுயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, நடத்தை, அவர்களுக்கு லீவு வழங்கல் என்பன உட்பட அவர்கள் தொடர்பிலான விதிகளை ஆக்குதல் ;

(ஒ) நீர்வழங்கல், சாக்கடைச் சேவைகள் என்பவற்றை ஏற்பாடு செய்வதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும், பேணுவதற்குமாக ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துடன் அல்லது அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் குழுவுடன் கூட்டுத்திட்டங்களை ஏற்பாடு செய்து கொள்ளல் ;

(ஓ) சபையினது அலுவல்களின் நிர்வாகந் தொடர்பில் விதிகளை ஆக்குதல் ;

(ஔ) அதன் தொழில்களைச் செவ்வையாகக் கொண்டு நடாத்துதலை இலகுவாக்குவதற்கு அவசியமானவை எனச் சபை கருதும் மற்றெல்லா அலுவல்களையும் செய்தல்.

**18.** சபையானது, அதற்கான உசாத்துணைவர்களாக இருக்கவென அல்லது அவ்வாறு தொழிற்படவென ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தை, வேறேதேனும் நிறுவனத்தை அல்லது தாபனத்தை அல்லது யாரேனும் தனியாளைக் காலத்துக்குக் காலம் நியமிக்கலாமென்பதோடு, அது தகுதியானதெனக் கருதும் அத்தகைய ஊதியத்தையும் அவர்களுக்குக் கொடுக்கலாம். உசாத்துணைவர்.

**19.** ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துடன் அல்லது அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் குழுவுடன் 17 ஆம் பிரிவின் (ஒ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் சபையினால் ஏற்பாடு செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் கூட்டுத்திட்டத்தின் நோக்கத்திற்காக நிறுவப்படும் எல்லா நீர்வழங்கல், சாக்கடைச் சேவை வேலைகளையும் அவற்றின் தொழிற்பாட்டையும் மேற்பார்வை செய்தலும், கட்டுப்பாடு செய்தலும் சபையின் கடமையாதல் வேண்டுமென்பதோடு, அவ்வாறு செய்யச் சபைக்குத் தத்துவமுமிருத்தல் வேண்டும் : கூட்டுத்திட்டங்களுக்கென நிறுவப்பட்ட நீர் வழங்கல், சாக்கடைச் சேவை வேலைகளை மேற்பார்வை செய்யவும் கட்டுப்பாடு செய்யவும் சபைக்குள்ள தத்துவம்.

ஆயின், எவ்வாறுயினும், அத்தகைய மேற்பார்வைகளையும் கட்டுப்பாட்டினையும் பிரயோகிப்பதில், சபையானது, அத்தகைய திணைக்களத்தின் அல்லது குழுவின் தேவைகளுக்கு உரிய கவனஞ் செலுத்தல் வேண்டும்.

19 ஆம் பிரிவின் கீழ் சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதனால் எழும் பிணக்குகள்.

**20.** பத்தொன்பதாம் பிரிவின் கீழ் சபையினது தத்துவங்களைப் பிரயோகிப்பது தொடர்பில், அப்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துக்கும் அல்லது குழுவுக்கும் சபைக்குமிடையே ஏதேனும் பிணக்கு எழுமிடத்து, அத்தகைய பிணக்கு அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதோடு, அதன்மீது அமைச்சர் செய்யும் முடிவு இறுதியானதாதலும் வேண்டும்; அத்துடன் அது நீதிமன்றம் அல்லது நியாயசபை எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

நீர்வழங்கலைச் சபை மட்டுமே மேற்கொள்ளல்.

**21.** சபை தவிர்ந்த ஆள் எவரும் அல்லது குழு எதுவும், அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையினாற் கொடுக்கப்பட்ட எழுத்திலான அனுமதியுடனன்றி, சபையின் அதிகார இடப்பரப்பு எதிலும் நீர் வழங்கலை மேற்கொள்ளுதலாகாது :

ஆயின், எவ்வாறுயினும், ஓர் உள்ளூரதிகாரசபையின் நீர் வழங்கல், சாக்கடைச் சேவை பொறுப்பு முயற்சியானது தன்னிச்சையான மாற்றறக்கட்டளை மூலம் அல்லது ஒரு வலுக்கட்டாய மாற்றற் கட்டளைமூலம் சபைக்கு மாற்றப்படாவிடின், மாற்றப்படாவிடின் மட்டுமே, அத்தகைய உள்ளூரதிகாரசபையினால் அதன் நிருவாக எல்லைகளுக்குள் வழங்கப்படும் அத்தகைய நீர் வழங்கலுக்கு இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாது.

உள்வாய்கள், வடிகட்டமைப்புக்கள், கட்டுக் கால்வாய்கள், தொட்டிகள், வேறு அமைப்புக்கள் என்பவற்றைச் சபை கட்டியமைத்தல்.

**22.** வசிப்போரது பயன்பாட்டுக்கெனச் சபையின் அதிகார இடப்பரப்புக்குள் அல்லது இடப்பரப்புகளுக்குள் நீரினைக் கொண்டு வருவதற்காக இலங்கையின் எப்பாகத்திலேனும் சபையானது காலத்துக்குக்காலம் உள்வாய்களை, வடிகட்டமைப்புக்களை, தொட்டிகளை, கட்டுக்கால்வாய்களை அல்லது வேறு அமைப்புகளைக் கட்டியமைக்கலாம்.

தெருக்கள் முதலியனவற்றைத் தோண்டுவதற்கும் தனிப்பட்டார் காணியுள் புகுவதற்கும் சபைக்குள்ள தத்துவம்.

**23.** (1) சபையானது நீர்வழங்குவதற்கென எவையேனும் குழாய்களை இடுகையில், அவசியமானதென அது கருதினால் ஏதேனும் தெருவுக்கூடாக அல்லது அதற்குக் குறுக்காக அல்லது அதற்குக் கீழாக, அல்லது தெருவுக்காக இடப்பட்ட அல்லது கருதப்பட்ட ஏதேனும் இடத்துக்கூடாக, குறுக்காக அல்லது அதற்குக் கீழாக அல்லது ஏதேனும் கட்டிடத்துக்கு, ஏதேனும் நிலவறைக்கு அல்லது உள்ளறைக்குக் கீழாக அல்லது எத்தன்மைத்தாயினுமான ஏதேனும் அடைக்கப்பட்ட அல்லது வேறு காணிக்குள்ளாக, அதற்கு ஊடாக அல்லது அதற்குக் கீழாக அத்தகைய குழாய்களை அமைக்கலாம். அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் சபையானது அவ்வாறு செய்வதற்குள்ள அதனது கருத்துப் பற்றி அத்தகைய அமைப்பினால் பாதிக்கப்படும் ஆதனத்தின் சொந்தக்காரருக்கு இரு பஞ்சாங்க மாத அறிவித்தல் கொடுத்தல்

வேண்டும் ; அத்துடன் வேலை முடிவடைந்ததன்மேல், இப்பிரிவினுல் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் வேலையினை நிறைவேற்றியமை காரணமாக அவரால் உறப்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது சேதத்திற்காக நியாயமான நட்டஈட்டினையும் அவருக்குக் கொடுத்தல் வேண்டும். அத்தகைய நட்டஈட்டுத் தொகை பற்றி அல்லது அதனைப் பங்கிடுதல் பற்றி ஏதேனும் பிணக்கு எழுமாயின், அத்தகைய தொகை அல்லது பங்கீடு, சபையினுல் விண்ணப்பிக்கப்படுவதன் மேல், அத்தகைய தொகை அல்லது பங்கீடு ஓராயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படுகின்றது அல்லது மேற்படவில்லையென்பதற்கிணங்க, பாதிக்கப்பட்ட ஆதனம் எம்மாவட்ட நீதிமன்றத்தின் அல்லது நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அம்மாவட்ட நீதிமன்றத்தினுல் அல்லது நீதிவான் நீதிமன்றத்தினுல் சுருக்கமுறையாக நிச்சயிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய மாவட்ட நீதிமன்றத்தின் அல்லது நீதிவான் நீதிமன்றத்தின் முடிவு உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கு அமைந்ததாதல் வேண்டும்.

(2) அத்தகைய மேன்முறையீடொவ்வொன்றும் மாவட்ட நீதிமன்றம் அல்லது நீதிவான் நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தில் வழங்கும் கட்டளைகளிலிருந்து செய்யப்படும் மேன்முறையீடுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனவும் அவற்றில் அவதானிக்கப்படுவனவும் ஆன காலத்துக்குள்ளும், அம்முறையினும், அவ்விதிகளுக்கும் வழக்காறுகளுக்குமமையவும், சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**தனியார் தெருவினூடாகச் சபையானது பிரதான நீர்க்குழாய்களை இடுதல் அல்லது பெருப்பித்தல்.**

24. (1) ஒருவீடு அல்லது அதற்கு மேற்பட்ட வீடுகள் அணுக்கம் பெறும் வகையில் ஏதேனும் தனியார் தெரு அமைக்கப்பட்டிருப்பின், சபையானது அவசியமாகக்கூடியவாருன அத்தகைய அளவுகளுக்கு அத்தகைய தனியார் தெருவினூடாகப் பிரதான நீர்க்குழாயை இடலாம், அதனைப் பெருப்பிக்கலாம் அல்லது நீட்டலாம் என்பதோடு, அத்தகைய பிரதான நீர்க்குழாயை முகப்பிற் கொண்டிருக்கும், அக்குழாய்க்கு அருகிலிருக்கும், அக்குழாயை ஒட்டியிருக்கும் அல்லது அணுகக்கூடியதாயிருக்கும் அல்லது எவ் அளவிலேனும் நன்மை பெறும் வளவுகளின் சொந்தக்காரர்களுக்கிடையே அத்தகைய பிரதான குழாயினை இடுவதற்கான, பெருப்பிப்பதற்கான அல்லது நீட்டுவதற்கான செலவு முழுவதையும் அல்லது செலவின் பாகத்தை குறித்த பிரதான குழாயினை இடுவதன்மூலம், பெருப்பிப்பதன் மூலம் அல்லது நீட்டுவதன் மூலம் ஏதேனும் அத்தகைய நன்மையைப் பெறக்கூடிய அல்லது பெறக்கூடியதாக அமைந்துள்ள அவ்வளவுகளின் இடப்பரப்புகளுக்கிணங்கப் பங்கிடலாம்.

(2) அத்தகைய பிரதான குழாயினை இடுவதற்கான, பெருப்பிப்பதற்கான அல்லது நீட்டுவதற்கான தொடக்கச் செலவு சபையினுல் பொறுக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் குறித்த பிரதான குழாயிலுள்ள ஆதனம் சபைக்குரியதாகவிருத்தல் வேண்டும்.

(3) அந்தந்த வளவுகளின் சொந்தக்காரர்களினால் கொடுக்கப்படவேண்டுமெனப் பங்கிட்டு ஒதுக்கப்பட்ட தொகைகள் அத்தகைய வளவுகளின்மீது பொறுப்பாக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, அது தொடர்பில் பங்கிட்டொதுக்கப்பட்ட தொகை கொடுப்பனவு செய்யப்படும்வரை அல்லது இதனகத்திதன்மேல் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அதனைக் கொடுப்பதாகச் சபையுடன் ஒப்பந்தமொன்று செய்து கொள்ளப்படும்வரை, தனிப்பட்ட நீர்வழங்கற் சேவை எதுவும் அத்தகைய வளவுகளுக்கு வழங்கப்படுதலாகாது.

(4) எதேனும் அத்தகைய தனியார் தெருவிலுள்ள எவையேனும் வளவுகள் தனிப்பட்ட குழாய்கள் மூலம் சபையின் பிரதான குழாய்களிலிருந்து ஏற்கனவே நீர்வழங்கப்படுவனவாயிருக்கும் போது, அத்தகைய தனிப்பட்ட குழாய்களைச் சுத்தப்படுத்துவதற்காக அல்லது புதுப்பித்தற்காக எடுத்தல் அவசியமானதாகவரும்போது, அதனைப் புதிய பிரதான குழாயுடன் தொடுக்குமாறு சபையானது சொந்தக்காரரைப் பணிக்கலாம்.

(5) (அ) தனியார் தெரு எதிலும் இப்போதுள்ள எதேனும் பிரதான நீர்க்குழாயானது எவரேனும் தனிப்பட்ட ஆளினது செலவில் இடப்பட்டிருக்கின்ற எதேனும் விடயத்தில், அத்தகைய தனிப்பட்ட தெருவில் முகப்புக் கொண்டிருக்கும், அத்தெருவுக்கு அருகிலிருக்கும், அத்தெருவை ஒட்டியிருக்கும் அல்லது அணுகக்கூடியதாகவிருக்கும் எதேனும் ஆதனத்தின் சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரர்கள் தனிப்பட்ட நீர் விநியோகத்திற்கெனச் சபைக்கு விண்ணப்பிப்பார்களாயின், அவரிடமிருந்து அல்லது அவர்களிடமிருந்து, அத்தகைய தெருவினை ஒட்டியிருக்கும் வளவுகளின் முகப்பின் விகிதத்திற்கிணங்கச் சபையின் பொது முகாமையாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான, குறித்த பிரதான குழாயை இடும் செலவின் அத்தகைய பங்கீட்டுத் தொகையொன்றை அறவிடுதல், அத்தகைய ஆளுக்குச் சட்டமுறையானதாகும்.

(ஆ) அத்தகைய தனிப்பட்ட ஆள் திருத்திப்படும் வகையில் அத்தகைய பங்கீட்டுத் தொகையைக் கொடுக்கும் வரை அல்லது அக்கொடுப்பனவுக்கான உத்தரவாதத்தினை அளிக்கும்வரை, ஆளெவரும், எதேனும் அத்தகைய பிரதான குழாயிலிருந்து தொடுப்பொன்றைச் செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது.

(6) (அ) எதேனும் அத்தகைய தனிப்பட்ட தெருவில் முகப்புக் கொண்டிருக்கும், அத்தெருவுக்கு அருகிலிருக்கும், அதனை ஒட்டியிருக்கும், அல்லது அணுகக்கூடியதாகவிருக்கும் எவையேனும் வளவுகள், மேற்சொல்லப்பட்ட எவரேனும் தனிப்பட்ட ஆளின் செலவில் இடப்பட்ட பிரதான குழாய் அல்லாத தனிப்பட்ட குழாய்கள் மூலம் சபையின் பிரதான குழாய்களிலிருந்து இப்போது நீர் வழங்கப்பட்டுவருமிடத்து அத்தகைய குழாய்களைச் சுத்தப்படுத்துவதற்கென அல்லது புதுப்பிப்பதற்கென எடுத்தல் அவசியமானதாக வரும் அத்தகைய காலம்வரை அத்தகைய குழாய்களைப் பயன்படுத்த அத்தகைய வளவுகளின் சொந்தக்காரர் அனுமதிக்கப்படலாம்.

(ஆ) அத்தகைய குழாய்களைச் சுத்தப்படுத்துவதற்கென அல்லது புதுப்பிப்பதற்கென எடுத்தல் அவசியமானதாகும்போது, குறித்த வளவுகளின் சொந்தக்காரர் அத்தகைய குழாய்களை அவற்றின் முன்னைய நிலையில் மீள இடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார் ; ஆனால் முன் சொல்லப்பட்ட தனிப்பட்ட ஆளினால் தனிப்பட்ட தெருவில் இடப்பட்டுள்ள பிரதான குழாயோடு அவற்றைத் தொடுத்தல் வேண்டும் ; அத்துடன் அதனோடு தொடுப்பு எதையும் செய்யுமுன்னர், அத்தகைய தெருவினை ஒட்டியிருக்கும் வளவுகளின் முகப்பின் விகிதத்திற்கிணங்கச் சபையின் பொது முகாமையாளரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான குறித்த பிரதான குழாயை இடும் செலவின் அத்தகைய பங்கீட்டுத் தொகையைக் கொடுத்தல் வேண்டும்.

(7) எதேனும் தனிப்பட்ட தெருவில் இடப்பட்ட பிரதான குழாய்கள் யாவும் சபைக்குரியவையாதல் வேண்டுமென்பதோடு, அவற்றைப் பேணுதற்கான, புதுப்பித்தற்கான, அத்துடன் பழுதுபார்த்தற்கான செலவுகள் சபையினால் பொறுத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

நீர் வீதவரி செலுத்துவோர் வீட்டுத்தேவைகளுக்காகப் பொது நிலக்குழாய்களிலிருந்து நீரைப் பயன்படுத்துவதற்கு அவர்க்குள்ள உரிமை.

**25.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அறவிடப்படக்கூடிய நீர் வீத வரி செலுத்தும் ஒவ்வோர் ஆளும், அவரதும் அவரது வீட்டைச் சேர்ந்தவர்களதும் வீட்டுத் தேவைகளுக்காக அதற்கென மேலதிகக் கட்டணம் எதுவுமின்றி, பொது நிலக்குழாய்களிலிருந்து நீரைப் பெற உரித்துடையவராவர்.

" வீட்டுத்தேவைகள் " என்பதில் எவை அடங்கா என்பது.

**26.** வீட்டுத் தேவைகளுக்காக நீரை வழங்குதல் என்பது, குதிரைகள், ஆடுமாடுகள் அல்லது வாகனங்கள் என்பன விற்பனைக்காக அல்லது வாடகைக்கு விடுவதற்கென வைத்திருக்கப்படுமிடத்து அத்தகைய குதிரைகளுக்கான அல்லது ஆடுமாடுகளுக்கான அல்லது வாகனங்களைக் கழுவுதற்கான நீர் வழங்கலை அல்லது எதேனும் வியாபாரம், உற்பத்தி அல்லது தொழிலுக்கான வழங்கலை அல்லது நீரூற்றுக்கான அல்லது நீச்சற் குளங்களுக்கான அல்லது எதேனும் அலங்கார அல்லது பொறிமுறை நோக்கத்திற்கான அல்லது நீர்ப்பாய்ச்சும் நோக்கத்திற்கான நீர் வழங்கலை உள்ளடக்காது.

வளவுகளுக்குள் புகுவதற்கும் அவற்றைச் சோதனையிடுவதற்கும் பொதுமுகாமையாளருக்குள்ள தத்துவம்.

**27.** சபையின் பொது முகாமையாளர் அல்லது அவரினால் அதற்கென அதிகாரமளிக்கப்படக்கூடிய எவரேனும் ஆள், இச்சட்டத்தின் கீழ் நீர் வழங்கப்படும் எதேனும் கட்டிடத்தில் அல்லது வளவில் குடியிருப்பவருக்கு ஒரு மணித்தியாலத்திற்குக் குறையாத அறிவித்தலைக் கொடுத்ததன் பின்னர், காலை எட்டு மணிக்கும் மாலை ஐந்து மணிக்குமிடையில் எந்நேரத்திலும் அத்தகைய கட்டிடத்துள் அல்லது வளவுள் புகுந்து, குழாய்கள், அமைப்புக்கள், பொருத்திகள் என்பனவற்றின் நிலைமையைச் சோதனையிடலாம் என்பதோடு, அத்தகைய நீர் வீணாக்கப்படுகின்றதா அல்லது தவறாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்பது பற்றியும் நிச்சயப்படுத்தலாம். பொது முகாமையாளர் அல்லது அவரினால் அதிகார

மளிக்கப்படும் எவரேனுமாள், அத்தகைய நேரம் எதனிலும் மேற்சொல்லப்பட்ட நோக்கத்திற்காக அத்தகைய கட்டிடம் அல்லது வளவுக்குள் புகுவதற்கு நியாயமான காரணமின்றி அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டால் அல்லது நியாயமான காரணமின்றி அத்தகைய சோதனையைச் செய்யவொட்டாது தடுக்கப்பட்டால், பொது முகாமையாளர் அத்தகைய கட்டிடத்துக்கு அல்லது வளவுகளுக்கு நீரை வழங்காது நிறுத்தலாம்

குழாய்கள் முதலியனவற்றைப் பழுதுபார்க்காது விடுவதற்கான தண்டனை.

**28.** சபையினால் நீர் வழங்கப்படும் எவரேனும் ஆள், ஏதேனும் குழாய், வால்வு, குழாய்முனை, தொட்டி, கழிநீர்த்தொட்டி, நீர் மலகூடம், வேறு கருவி அல்லது கொள்கலன் பழுதடைவதை, அல்லது அவருக்குச் சபையினால் வழங்கப்படும் நீர் வீணாகும் வண்ணம், அல்லது தவருகப் பயன்படுத்தப்படும் வண்ணம், அல்லது முறைகேடாகப் பயன்படுத்தப்படும் வண்ணம், அல்லது அசுத்தமாகும் வண்ணம் அல்லது மேற்கண்டவாருதல் சாத்தியமாகும் வண்ணம் அவை பயன்படுத்தப்படுவதை, அல்லது உபாயமாக்கப்படுவதை அல்லது கெட்ட காற்ருே, அசுத்தப் பொருளோ, தீங்கான பொருளோ சபைக்குரிய குழாய்களுக்குள் அல்லது சபைக்குரிய குழாய்களோடு தொடுக்கப்பட்ட குழாய்களுக்குள் நுழைவதை அல்லது வருவதை வேண்டுமென்றே அல்லது கவலையீனமாக ஏற்படுத்தும் அல்லது அனுமதிக்கும் ஆள் எவரும் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் அத்தகைய தவறு ஒவ்வொன்றுக்கும் நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

குழாய்கள் முதலியனவற்றைப் பழுதுபார்ப்பதற்கும் செலவுகளை அறவிடுவதற்கும் பொது முகாமையாளருக்குள்ள தத்துவம்.

**29.** சபையின் பொது முகாமையாளர், நீர் வீணாக்கப்படுவதனைத் தடுக்கக் கூடிய முறையில் எவையேனும் வளவுகளிலுள்ள ஏதேனும் குழாயை, வால்வை, குழாய் முனையை, தொட்டியை, கழிநீர்த் தொட்டியை, நீர் மலகூடக் கருவியை அல்லது வேறு கருவியை அல்லது கொள்கலனை பழுதுபார்க்கலாம் அல்லது புதுப்பிக்கலாம் அல்லது பதிலீடு செய்யலாம் என்பதோடு, அத்தகைய பழுது பார்த்தல், புதுப்பித்தல் அல்லது பதிலீடு செய்தல் என்பவற்றுக்கான செலவுகள், வளவுகளின் சொந்தக்காரரினால் அல்லது அவ்வளவுகளிற் குடியிருப்பவரினால் செலவிடப்படுதல் வேண்டும் ; அத்துடன் அத்தொகை இச்சட்டத்தின் கீழ் கொடுபடற்பாலதான நீர்வழங்கல் விதிப்பொன்றுற் போன்று சபையினால் அறவிடப்படலாம்.

நீரைத்தவருகப் பயன்படுத்துதல்.

**30.** (அ) வீட்டுத் தேவைகள் அல்லாத தேவைகளுக்கென சபையிலிருந்து நீர் வழங்கலைப் பெருது, சபையினால் அவருக்கு வழங்கப்பட்ட நீரை வீட்டுத் தேவையல்லாத வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துகின்ற ; அல்லது

(ஆ) வீட்டுத் தேவைகள் அல்லாத தேவைகளுக்கென சபையிலிருந்து நீர் வழங்கலைப் பெற்று, பயன்படுத்த உரித்துடைய தேவை அல்லாத வேறெத் தேவைக்கும் பயன்படுத்துகின்ற,

ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமெனப்தோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, தவறுகப் பயன் படுத்தப்பட்ட நீரின் பெறுமதியை அவரிடமிருந்து அறவிடுவதற்குச் சபைக்குள்ள உரிமைக்குப் பங்கமின்றி, இருபது ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

பொதுமுகாமையாளரின் சம்மதத்துடனன்றி நீர்ப்பெறும் குழாய்க்கு அல்லது வேறு குழாய்க்கு குழாயை அல்லது கருவியைப் பொருத்துவதற்கான தண்டனை.

**31.** சபையிலிருந்து நீரை எடுத்துச் செல்வதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் குழாயுடன் அல்லது கருவியுடன் ஏதேனும் குழாயை அல்லது கருவியை, அத்தகைய குழாய் அல்லது கருவி சபையினது ஆதனமாகவிருப்பினுஞ்சரி தனியார் ஆதனமாகவிருப்பினுஞ்சரி, அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும், பொது முகாமையாளரின் சம்மதத்துடனன்றிப் பொருத்துதல் அல்லது பொருத்தச் செய்தல் அல்லது பொருத்த அனுமதித்தல், சபையிலிருந்து நீர் வழங்கப்படும் எவையேனும் வளவுகளின் சொந்தக்காரருக்கு அல்லது அவ்வளவுகளிற் குடியிருப்பவருக்கு அல்லது சபையிலிருந்து நீரைப் பெறும் எவரேனும் ஆளுக்கு அல்லது எவரேனும் வேறு ஆளுக்குச் சட்டமுறையானது ஆகாது; அத்துடன் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணுக எவ்வகையிலும் எவரேனுமாள் செயலாற்றினுல் சபையின் ஆதனத்திற்குச் செய்யப்பட்ட ஏதேனும் ஊறுபாடு தொடர்பில் அவரிடமிருந்து நட்டஈட்டினை அறவிடுவதற்குச் சபைக்குள்ள உரிமைக்குப் பங்கமின்றியும், வீணுக்கப்பட்ட, தவறுகப் பயன்படுத்தப்பட்ட அல்லது முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் நீரின் பெறுமதியை அறவிடுவதற்குச் சபைக்குள்ள உரிமைக்குப் பங்கமின்றியும், அத்தகைய தவறெவ்வொன்றுக்காகவும் நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அவர் ஆளாதல் வேண்டும்.

வேறெவரேனுமாளுக்கு நீரை வழங்குவதற்கான அல்லது நீர் வழங்கப்பட்ட வளவுகளிலிருந்து வேறெவரேனுமாளினுல் நீர் எடுக்கப்பட அனுமதிப்பதற்கான தண்டனை.

**32.** இச்சட்டத்தின் கீழ் நீர் வழங்கப்பட்ட எவையேனும் வளவுகளின் சொந்தக்காரர் அல்லது அதிற் குடியிருப்பவர் ஒவ்வொருவரும், ஏதேனும் தீயை அணைக்கும் நோக்கத்திற்காகவல்லாது அல்லது சபையினுல் நீர் வழங்கப்பட்டவராயிருந்து, அவரது தவறினுலன்றி அவருக்கு நீர் வழங்கும் குழாய் பழுதடைந்திருந்தாலொழிய, அத்தகைய வளவுகளுக்குள்ளிருக்கும் ஏதேனும் தொட்டி அல்லது குழாயிலிருந்து வேறெவரேனுமாளுக்கு அத்தகைய ஏதேனும் நீரை வழங்கினுல் அல்லது எடுப்பதற்கு வேண்டுமென்று அனுமதித்தால், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

நீர்த்தேக்கம் முதலியவற்றிலிருந்து நீரை எடுப்பதற்கான அல்லது பயன்படுத்துவதற்கான தண்டனை.

**33.** சபைக்குச் சொந்தமான ஏதேனும் நீர்த்தேக்கம், நீர் வழி, குழாய்க்கால்வாய் அல்லது குழாயிலிருந்து அல்லது ஏதேனுமத்தகைய நீர்தேக்கம், நீர்வழி, குழாய்க்கால்வாய் அல்லது குழாய் என்பவற்றிற்குச் செல்லும் அல்லது அவற்றிலிருந்து வரும் ஏதேனும் குழாயிலிருந்து, அல்லது சபைக்குச் சொந்தமான அல்லது சபையிலிருந்து வழங்கப்படும் நீரைக் கொண்ட

அல்லது பொதுமக்களின் நன்மைக்கென ஏற்பாடு செய்யப்பட்ட இலவச நீர்வசதி தவிர்ந்த, சபையின் நீரைப் பயன்படுத்துபவர் எவருக்குமான நீரைக் கொண்டுள்ள ஏதேனும் தொட்டியிலிருந்து அல்லது அதுபோன்ற வேறு இடத்திலிருந்து தவருக நீரை எடுக்கின்ற அல்லது பயன்படுத்துகின்ற ஒவ்வோர் ஆளும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

அமைப்புக்கள் முதலியவற்றை அழித்தல், ஊறுபடுத்தல் முதலியவற்றுக்கும், நீரை வீணுக்குவதற்குமான தண்டனை.

**34.** பொது முகாமையாளரின் அதிகாரமில்லாது சபைக்குச் சொந்தமான ஏதேனும் பூட்டு குழாய் இணைப்பு, குழாய்முனை, வால்வு, குழாய், அமைப்பு அல்லது எந்திரத்தை வேண்டுமென்று அல்லது கவலையீனமாக உடைக்கின்ற, ஊறுபடுத்துகின்ற, திறக்கின்ற, மூடுகின்ற அல்லது தவறுன முறையில் இவற்றோடு தலையிடுகின்ற, அல்லது இவற்றைப் பிழைபடுத்துகின்ற அல்லது சபைக்குச் சொந்தமான நீர்த்தேக்கங்கள் அல்லது வேறு அமைப்புகளிலிருந்து நீரை எடுக்கின்ற அல்லது அதன் மூலம் அத்தகைய நீர் வீணுக்கப்படும் அல்லது நீரின் வழங்கல் தடைப்படுத்தப்படும் அபாயமுள்ள வேறேதேனும் செயலை வேண்டுமென்று செய்கின்ற ஒவ்வோராளும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

குறித்த சில சந்தர்ப்பங்களில் நீர் வழங்கலைத் துண்டித்துவிடுவதற்குப் பொதுமுகாமையாளருக்குள்ள தத்துவம்.

**35.** சபையிலிருந்து நீர் வழங்கப்பட்ட எவரேனுமாள் இச்சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் கீழாக்கப்படும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுள் எவற்றையேனும் மீறி எதனையும் செய்தால் அல்லது செய்வித்தால் அல்லது செய்ய அனுமதித்தால் அல்லது சபைக்குச் சொந்தமான நீர் வீணுக்கப்படுவதனை, தவருகப் பயன்படுத்தப்படுவதனை, மிகையாகப் பயன்படுத்தப்படுவதனை அல்லது அசுத்தப்படுத்தப்படுவதனைத் தடுப்பதற்காக அவ்வேற்பாடுகளுள் எதன் கீழும் செய்திருக்கவேண்டிய எதனையும் செய்வதற்கு முறைகேடாகத் தவறினுல், பொது முகாமையாளர், (அது தொடர்பில் அவ்வாளுக்கெதிராக எடுக்கப்படக்கூடிய ஏதேனும் பரிகாரத்திற்குப் பங்கமின்றி) அத்தகைய ஆளுக்கு அல்லது அவரது பயன்பாட்டுக்கென எக்குழாய்களினுல் அல்லது குழாய்கள் மூலம் நீர் வழங்கப்பட்டதோ அக்குழாய்களுள் எதனையும் துண்டித்துவிடலாம் என்பதோடு, அவருக்கு நீர் வழங்குவதனை நிறுத்தியும்விடலாம்.

நீர்வழங்கலைத் துண்டித்து விடுவதற்காகப் பொது முகாமையாளர் அல்லது அவரது முகவர்கள் ஏதேனும் கட்டிடத்துள் அல்லது வளவுள் புகலாம்.

**36.** ஏதேனும் கட்டிடத்திற்கு அல்லது எவையேனும் வளவுகளுக்கு நீர் வழங்கலைத் துண்டித்துவிடுமாறு அல்லது நிறுத்துமாறு பொது முகாமையாளர் இச்சட்டத்தினுல் அதிகாரமளிக்கப்பட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பங்களினும், சபையினுல் நீர் வழங்கப்பட்ட ஏதேனும் கட்டிடம் அல்லது வளவு, குடியிருப்பவர் எவரும் இல்லாததாகவரும் எல்லாச் சந்தர்ப்பங்களினும் அவ்வளவுகளின் சொந்தக்காரருக்கு அல்லது அவ்வளவுகளிற குடியிருப்பவருக்கு நியாயமான அறிவித்தலைக் கொடுத்ததன் பின்னர், பொது முகாமையாளர், அவரது முகவர்கள், வேலையாட்கள்

என்போர், காலை எட்டு மணிக்கும் மாலை ஐந்து மணிக்குமிடையில் அத்தகைய கட்டிடத்துள் அல்லது வளவுக்குள் புகலாம் என்பதோடு, எக்குழாய்கள் மூலம் அவ்வளவுக்கு நீர் எடுத்துச் செல்லப்படுகின்றதோ அக்குழாய்கள் எவற்றையும் துண்டித்து சபையின் ஆதனமாகவுள்ள ஏதேனும் குழாயையும், மானியையும், பொருத்திகளையும், அத்துடன் கருவிகளையும் அகற்றலாம்.

நீர் முதலிய வற்றை அசுத்தமாக்குவதற்கான தண்டனை.

**37.** அடுத்து, இதனகத்திதன்மேல் காட்டப்பட்டுள்ள தவறுகளுள் எதனையும் புரிகின்ற ஒவ்வோர் ஆளும் நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் அத்தகைய தவறெவ்வொன்றுக்காகவும் ஐம்பது ரூபாவுக்கு மிகாத குற்றப்பணமொன்றினால் தண்டிக்கப்படக்கூடியவராதல் வேண்டும் ; அவையாவன :—

(அ) சபைக்குச் சொந்தமாகவுள்ள ஏதேனும் நீரோடை, நீர்த்தேக்கம், கட்டுக்கால்வாய் அல்லது வேறு நீர் வழங்கல் அமைப்புக்களில் குளித்தல், அல்லது ஏதேனும் நாயை அல்லது வேறு விலங்கினை அதன்கண் கழுவுதல், எறிதல் அல்லது புகச் செய்தல் ;

(ஆ) மேலே சொல்லப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய நீரோடை, நீர்த்தேக்கம், கட்டுக்கால்வாய், குழாய் இணைப்பு, மேற்பரப்புப்பெட்டி அல்லது வேறு நீர் வழங்கல் அமைப்புக்கள் என்பனவற்றுக்குள் ஏதேனும் குப்பையை, கூளத்தை, கழிவுப்பொருளை அல்லது வேறு அசுத்தமான பொருளை எறிதல், அல்லது அதன்கண் ஏதேனும் விலங்கின் ஆடையை, கம்பளியை, பதனிடப்பட்ட தோலை அல்லது தோலை அல்லது எவையேனும் ஆடை வகைகளை அல்லது வேறு பொருளைக் கழுவுதல் அல்லது சுத்தமாக்குதல் ;

(இ) நீர்வழங்கல் அமைப்புகளுக்குச் சேர்ந்த காணியில் அல்லது நீர்வழங்கலோடு தொடர்புபட்ட கட்டிடங்கள் அல்லது வளவுகளுக்குள் அத்துமீறிச் செல்லுதல் ;

(ஈ) நீர் வழங்கலோடு தொடர்புபட்ட ஏதேனும் வாய்க்கால், தாங்கி, நீர்த்தேக்கம், தொட்டி, கிணறு, நீரூற்று, நிலக்குழாய் அல்லது வேறு அமைப்பினைச் சட்டமுறையற்றவகையில் உடைத்தல், ஊறுபடுத்துதல் அல்லது அவற்றுக்கு வேறு ஏதேனும் முறையில் சேதம் விளைத்தல் ;

(உ) ஏதேனும் கழிநீர்த்தொட்டி, சாக்கடை அல்லது வடிகால், நீராவி எந்திரம், கொதிகலம் என்பவற்றிலிருந்து வரும் நீரை அல்லது அவருக்குச் சொந்தமாகவுள்ள அல்லது அவரது கட்டுப்பாட்டின் கீழுள்ள வேறு நீரை சபைக்குச் சொந்தமாகவுள்ள ஏதேனும் நீரோடை, நீர்த்தேக்கம், கட்டுக்கால்வாய் அல்லது வேறு நீர்வழங்கல் அமைப்புகளுக்குள் ஓடச் செய்தல் அல்லது கொண்டுவருதல் அல்லது நீர் வழங்கல் அமைப்புகளுக்குச் சேர்ந்த நீர் அச்செயல் மூலம் அசுத்தப்படுத்தப்படக்கூடிய வேறு ஏதேனும் செயலைச் செய்தல் :

அத்துடன் இறுதியாகக் கூறப்பட்ட அத்தகைய தவறு (ஒரு நாளுக்கு மேற்படத்) தொடருமாயின் அவ்வாறு தொடருகின்ற ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபா மேலதிகக் குற்றப்பணத்திற்கும் அத்தகைய ஆள் ஒவ்வொருவரும் ஆளாதல் வேண்டும்.

நீர்வழங்கல் அமைப்புகளுக்குச் சேர்ந்த எதேனும் நீரோடை முதலியவற்றிலுள்ள நீர் எத்தொழில் மூலம் அசுத்தப்படுத்தப்படுமோ அத்தகைய ஏதேனும் தொழிலோடு தொடர்புபட்ட ஏதேனும் செயலைச் செய்வதற்கான தண்டனை.

38. (1) ஏதேனும் தொழில் கொண்டுநடாத்தப்படுகின்ற எவையேனும் வளவுகளின் சொந்தக்காரராக, கண்காணிப்பாளராக, முகவராக, முகாமையாளராக அல்லது அவ்வளவுகளிற் குடியிருப்பவராக இருந்துகொண்டு சபைக்குச் சொந்தமான ஏதேனும் நீரோடை, நீர்த்தேக்கம், நீர்த்தொட்டி, கட்டுக்கால்வாய் அல்லது வேறு அமைப்பிலுள்ள நீர் அச்செயலால் அசுத்தப்படுத்தப்படக் கூடிய அல்லது அசுத்தப்படுத்தப்படலாகும் செயலை அத்தொழில் தொடர்பில் செய்கின்ற அல்லது செய்விக்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, 37 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், ஆயிரம் ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கும், பொது முகாமையாளரினால் ஒப்பமிடப்பட்ட அறிவித்தலொன்று அத்தகைய எவரேனுமாள்மீது விடுக்கப்பட்டதன் பின்னர் இருபத்திநாலு மணித்தியாலங்கள் முடிவடைந்ததன் பின்னர் அத்தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாவுக்கு மிகாத மேலதிகக் குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) பொது முகாமையாளர் அல்லது அதற்கென எழுத்தில் அவரால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் ஆள் தவிசாளரின் அனுமதியுடன் பொது முகாமையாளரினால் ஒப்பமிடப்பட்டதும் அவ்வாறு செய்யப்போவதாக அவரது கருத்துப்பற்றியதும் ஆன அறிவித்தலொன்று அத்தகைய சொந்தக்காரர், கண்காணிப்பாளர், முகவர், முகாமையாளர் அல்லது குடியிருப்பாளர் மீது விடுக்கப்பட்டதிலிருந்து இருபத்திநாலு மணித்தியாலங்கள் முடிவடைந்ததன் பின்னர், அத்தகைய வளவுகளோடு நேரடியாக அல்லது நேரடியற்றமுறையில் தொடுக்கப்பட்டுள்ள ஏதேனும் குழாயையும் அல்லது அமைப்பையும் சபைக்குச் சொந்தமான ஏதேனும் நீரோடை, நீர்த்தேக்கம், நீர்த்தொட்டி, கட்டுக்கால்வாய் அல்லது வேறு அமைப்பு என்பனவற்றையும் திறந்து பரிசோதிக்கலாம்.

பரிசோதனைக்கான செலவு.

39. அத்தகைய பரிசோதனையின்மீது பரிசோதிக்கப்பட்ட குழாயிலிருந்து அல்லது அமைப்பிலிருந்து வரும், அல்லது அதில் அடங்கியுள்ள எதனினாலேனும் ஏதேனும் நீர் அசுத்தப்படுத்தப்பட்டிருப்பதாகத் தோன்றுமாயின் அப்பரிசோதனைக்கான செலவுகள் அத்தகைய குழாய் அல்லது அமைப்பு எவருக்குச் சொந்தமானதோ அல்லது எவரின் முகாமையின்கீழ் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் அவை உள்ளனவோ அவரினால் கொடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பரிசோதனையின் மீது அத்தகைய நீர் அவ்வாறு அசுத்தப்படுத்தப்படவில்லையெனத் தோன்றுமாயின் அத்தகைய செலவுகள் சபையினாற் பொறுக்கப்படுதல் வேண்டும்.

40. சாக்கடைக் கழிவுப்பொருள்களைத் திறமையுடன் ஒன்று சேர்ப்பதற்காகவும் ஒழிப்பதற்காகவும் சாக்கடைகள் துணையமைப்புகள், சென்றுவீழிடங்கள், பரிகரிப்பு அமைப்புகள், வேறு அமைப்புகள் என்பவற்றைக் காலத்துக்குக்காலம் இலங்கையின் எப்பாகத்திலும் சபையின் அதிகார இடப்பரப்புக்குள் அல்லது இடப்பரப்புகளுக்குள் சபையானது கட்டி அமைக்கலாம்.

சாக்கடைகள், சென்று வீழிடங்கள், பரிகரிப்பு அமைப்புகள், வேறு அமைப்புகள் என்பவற்றை சபை கட்டி அமைத்தல்.

41. (1) சபையானது எவையேனும் குழாய்களை அல்லது சாக்கடைகளை அமைக்கும்போது ஏதேனும் தெருவினூடாக அல்லது தெருவுக்காக இடப்பட்ட அல்லது கருதப்பட்ட ஏதேனுமிடத்தினூடாக அல்லது தெருக்களுள் எதனதும் கீழ் உள்ள ஏதேனும் நிலவறை அல்லது உள்ளறை என்பவற்றுக்கூடாக, அல்லது அவற்றுக்குக் குறுக்காக அல்லது கீழாக (அதற்கென எழுத்திலான நியாயமான அறிவித்தலின் பின்னர்) எத்தன்மையனவும் ஆன எவையேனும் அடைக்கப்பட்ட அல்லது வேறு காணிகளுக்குள், காணிகளுக்கூடாக, அல்லது காணிகளின் கீழ் அவற்றை அமைக்கலாம். அப்பொழுது இயன்றளவு குறைந்த சேதமே விளைத்தல் வேண்டும். அத்துடன் செய்யப்பட்ட சேதத்துக்கான நட்டஈட்டினை முழுமையாகச் செலுத்துதலும் வேண்டும். அத்தகைய நட்டஈட்டுத் தொகை பற்றி அல்லது அதனைப் பங்கிடுவதுபற்றி ஏதேனும் பிணக்கு எழுமாயின், அத்தகைய தொகை அல்லது பங்கிடு, சபையினால் விண்ணப்பிக்கப்படுவதன் மேல் அத்தகைய தொகை அல்லது பங்கிடு ஓராயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படுகின்றது அல்லது மேற்படவில்லையென்பதற்கிணங்க, அத்தகைய குழாய்கள் அல்லது சாக்கடைகள் எம்மாவட்ட நீதிமன்றத்தின் அல்லது நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளனவோ அம்மாவட்ட நீதிமன்றத்தினால் அல்லது நீதிவான் நீதிமன்றத்தினால் சுருக்கமுறையாக நிச்சயிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய மாவட்ட நீதிமன்றத்தின் அல்லது நீதிவான் நீதிமன்றத்தின் முடிவு உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்தற்கமைந்ததாதலும் வேண்டும்.

தெருக்களைத் தோண்டுதல் முதலியனவற்றுக்கும் தனியார் காணிகளுள் புகுவதற்கும் சபைக்குள்ள தத்துவம்.

(2) மாவட்ட நீதிமன்றத்தினது அல்லது நீதிவான் நீதிமன்றத்தினது சாதாரண நியாயாதிக்கத்தில், அவற்றின் தீர்ப்புக் கட்டளைகளிலிருந்து செய்யப்படும் மேன்முறையீடுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனவும் அவற்றில் அவதானிக்கப்படவேண்டியனவுமான காலத்துள்ளும் அம்முறையிலும் அவ்விதிகளுக்கும் வழக்காறுகளுக்குமமையவும் அத்தகைய மேன்முறையீடு ஒவ்வொன்றும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

42. (1) சபையானது, பொது சாக்கடைகளின் முறையான காற்றோட்டத்திற்கு அவசியமென அது கருதக்கூடிய அத்தகைய குழாய்களையும் பொருத்திகளையும் எக்கட்டிடத்திற்கு வெளியிலேனும் பொருத்துவிக்கலாம்.

சாக்கடைகளின் காற்றோட்டத்திற்காகக் குழாய்களைக் கட்டிடங்களுக்குப் பொருத்துவதற்குள்ள தத்துவம்.

(2) அத்தகைய குழாய்களும் பொருத்திகளும் அயல் இடங்களுக்கு இயன்றளவில் ஆகக்குறைந்த வசதிக்குறைவினை உண்டு பண்ணும் வகையில் அமைக்கப்பட்டு நிறுவப்படுதல் வேண்டும். அத்தகைய குழாய் ஒவ்வொன்றினதும் வெளிவாய் அது பொருத்

தப்பட்டுள்ள கட்டிடங்களின் தாழ்வாரத்திற்கு மேல் ஆகக்குறைந்தது இரண்டடி உயரத்திலும் எதேனும் சன்னலில் இருந்து ஆகக் குறைந்தது பத்தடி தூரத்திலும் இருத்தல் வேண்டும்.

அதிகாரமின்றி தனியார் சாக்கடையை எதேனும் பொதுச் சாக்கடையுடன் தொடுத்தல்.

**43.** (1) சபையினது எழுத்திலான சம்மதத்தினை முதலிற் பெருது, எதேனும் பொதுச் சாக்கடையுடன் எதேனும் தனியார் சாக்கடையை நேரடியாக அல்லது நேரடியற்ற வகையில் தொடுக்கின்ற அல்லது தொடுக்கச் செய்கின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப் பணத்திற்கும் அத்துடன் அத்தவறு தொடர்ந்து புரியப்படுகின்ற விடயத்தில், அத்தகைய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் அத் தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்காகவும் இருபத்தைந்து ரூபாவுக்கு மிகாத மேலதிகக் குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) சபையின் சம்மதம் இன்றி எதேனும் அத்தகைய பொதுச் சாக்கடையுடன் தொடுக்கப்பட்ட எதேனும் தனியார் சாக்கடையை சபை இடிப்பிக்கலாம், மாற்றுவிக்கலாம் அல்லது வேறுவகையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இசைவான முறையாக அமையும் வண்ணம் செய்விக்கலாம் ; அத்துடன் அதனால் உறப்பட்ட செலவுகள் யாவும் அத்தகைய சாக்கடையைத் தொடுத்த அல்லது தொடுப்பித்த ஆளினால் கொடுக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு கொடுக்கத் தவறும் விடயத்தில் சாக்கடைச் சேவைக்கட்டணமொன்றுற்போன்று அது அறவிடப்படக்கூடியதாதல் வேண்டும்.

பொதுச் சாக்கடைகள் முதலியவற்றுக்கு மேலாகக் கட்டிடம் கட்டுதல்.

**44.** (1) சபையினது எழுத்திலான சம்மதத்தினை முதலிற் பெருது, எவையேனும் பொதுச் சாக்கடைளுக்கு மேலாக எதேனும் கட்டிடத்தை அல்லது அமைப்பைக் கட்டுகின்ற அல்லது கட்டியமைக்கின்ற அல்லது கட்டுவிக்கின்ற அல்லது கட்டியமைப்பிக்கின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கும், அத்துடன் தவறு தொடர்ந்து புரியப்படுகின்ற விடயத்தில், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர், அத்தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்காகவும் இருபத்தைந்து ரூபாவுக்கு மிகாத மேலதிகக் குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) சபையின் சம்மதமின்றி, கட்டப்பட்டதான அல்லது கட்டியமைக்கப்பட்டதான ஒராமுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட எதேனும் கட்டிடத்தை அல்லது அமைப்பைச் சபை இடிப்பிக்கலாம், மாற்றுவிக்கலாம் அல்லது வேறு வகையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிசைவான முறையாக அமையும் வண்ணம் அதனைச் செய்விக்கலாம் ; அத்துடன் அதனால் உறப்பட்ட செலவுகள் யாவும் அத்தகைய கட்டிடத்தை அல்லது அமைப்பைக் கட்டிய, அல்லது கட்டியமைத்த அல்லது கட்டுவித்த அல்லது கட்டியமைப்பித்த ஆளினால் கொடுக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு கொடுக்கத் தவறும் விடயத்தில், சாக்கடைச் சேவைக் கட்டணமொன்றுற்போன்று அது அறவிடப்படக்கூடியதாதல் வேண்டும்.

தனியார் சாக்கடைகளைக் கட்டியமைத்தல் முதலியன.

45. (1) (அ) ஏதேனும் தனியார் சாக்கடைகளை அல்லது சாக்கடைச் சேவைச் சாதனத்தைக் கட்டியமைத்தல், பொருத்துதல் அல்லது மாற்றுதல் ; அல்லது

(ஆ) எவையேனும் பொதுச் சாக்கடைகளுடன், எவையேனும் தனியார் சாக்கடைகளைத் தொடுத்தல்,

எனபவற்றோடு தொடர்புபட்ட எல்லா வேலைகளும் சபையின் அலுவலரினால் அல்லது சபையினால் அதற்கென உரிமமளிக்கப் பட்ட ஆளினால் சாக்கடை அமைக்கப்படும் வளவுச் சொந்தக்காரர்களது செலவிலும் பொறுப்பிலும், இச்சட்டத்தின் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் நிறைவேற்றப்படுதல் வேண்டும் :

எனினும், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், ஏதேனும் பொதுச் சாக்கடையின் அல்லது அதனோடு தொடர்புபட்ட ஏதேனும் சாதனத்தின் விடயத்தில் ஏற்புடையனவாகா.

(2) சபையின் அலுவலர் அல்லாதவராக அல்லது சபையினால் உரிமமளிக்கப்பட்ட ஆளொருவர் அல்லாதவராக இருந்து, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வேலையை நிறைவேற்றுகின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(3) (சபையின் அலுவலர் அல்லது சபையினால் உரிமமளிக்கப் பட்ட ஆள் தவிர்ந்த) எவரேனுமாளினால், அல்லது இச்சட்டத்தின் அல்லது அப்போதைக்கு வலுவிலிருக்கும் எவையேனும் ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்கவல்லாது வேறுவிதமாக (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வேலை நிறைவேற்றப்பட்டுள்ளவிடத்து, சபையானது அத்தகைய வேலையை இடிப்பிக்கலாம், மாற்றுவிக்கலாம் அல்லது வேறு வகையில் அத்தகைய ஏற்பாடுகளுக்கிசைவான முறையாக அமையும் வண்ணம் செய்விக்கலாம் ; அத்துடன் சபையின் அலுவலரால் வேலை நிறைவேற்றப்பட்ட விடயத்தில் தவிர, அதனால் உறப்பட்ட செலவுகள் யாவும் அவ்வேலை நிறைவேற்றப்பட்ட வளவுகளின் சொந்தக் காரரினால் கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, அவ்வாறு கொடுக்கத் தவறும் விடயத்தில், சாக்கடைச் சேவைக் கட்டணமென்றுற்போன்று அது அறவிடப்படக்கூடியதாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் நிறைவேற்றப்படும் வேலை எதுவும், நியாயமான எல்லா நேரங்களிலும் சபையின் அலுவலர்களினால் பார்வையிடப்படுதற்குரியதாதலும் வேண்டும்.

புதிய கட்டிடங்களுக்கான சாக்கடைகள்.

46. (1) ஏதேனும் புதிய கட்டிடத்தைக் கட்டுகின்ற அல்லது கட்டுவிக்கின்ற அல்லது ஏதேனும் கட்டிடத்தை மீளக் கட்டுகின்ற அல்லது மீளக் கட்டுவிக்கின்ற ஒவ்வோர் ஆளும், அத்தகைய கட்டிடத்தின் சாக்கடைச் சேவை வசதிக்கும் ஏதேனும் சாக்கடைச் சகதி, அழுக்குத் திரவங்கள் அல்லது மலமண்டி என்பன சேர்க்கப்பட்டு அகற்றப்படுவதற்கும் சபையின் அபிப்பிராயப்படி தேவையான அத்தகைய சாக்கடைகளையும் சாதனங்களையும்,

இச்சட்டத்தின் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய கட்டிடத்திற்கு ஏற்பாடு செய்வித்தல் வேண்டும்.

(2) மேற்சொல்லப்பட்டவாறாக அத்தகைய சாக்கடைகளையும் சாதனங்களையும் ஏற்பாடு செய்யத் தவறுகின்ற அல்லது ஏற்பாடு செய்யாது உதாசீனமாகவிருக்கின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் இரு நூற்றைம்பது ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

சாக்கடையிலிருந்து முந்நூறு அடிக்குள் இருக்கும் வளவுகளுக்கான சாக்கடைச் சேவை.

47. (1) ஏதேனும் பொதுச் சாக்கடையிலிருந்து அல்லது சட்டமுறையாகச் சாக்கடைப் பொருள் செல்லவிடப்படக்கூடிய வேறு தகுந்த இடத்திலிருந்து முந்நூறு அடிக்குள்ளாக எவையேனும் வளவுகள் இருக்கின்றவிடத்து, சபை, அத்தகைய வளவுகளின் சொந்தக்காரருக்கு விடுக்கப்படும் எழுத்திலான அறிவித்தல்மூலம், அவ்வறிவித்தலிற் குறிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துள், அத்தகைய வளவுகளின் சாக்கடைச் சேவையைத் திறமையாக ஆற்றுவதற்குச் சபை அவசியமானவையெனக் கருதக்கூடிய பின்வரும் வேலைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையேனும் அப்போதைக்கு வலுவிலுள்ள எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க, சபையின் திருத்திக்கு ஏற்பாடு செய்து நிறைவேற்றுமாறு அத்தகைய சொந்தக்காரரைத் தேவைப்படுத்தலாம் ; அவையாவன :—

(அ) சாக்கடைச் சகதி, அழுக்குத்திரவங்கள் என்பனவற்றை அகற்றுவதற்கும் அத்தகைய சாக்கடைக்குள் அல்லது வேறு தகுந்த இடத்துள் சேரவிடுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வாய்க்கால்கள், சாக்கடைகள், நீர்கழிகால்கள், ஆள்நுழை துவாரங்கள், சாதனங்கள் என்பனவற்றை ஏற்பாடு செய்தலும் கட்டியமைத்தலும் ;

(ஆ) போதிய அளவு நீர் கிடைக்கக்கூடியவிடத்து, போதிய அளவிலானவையும் பொருத்தமானவையுமான நீர்மலகூடங்களையும் அல்லது மேலதிக நீர்மலகூடங்களையும் அதனோடு தொடர்புபட்ட சாக்கடைகளையும் வேறு சாதனங்களையும் ஏற்பாடு செய்தலும் கட்டியமைத்தலும்; அத்துடன் ஏதேனும் குழிமலகூடம், மறைவுக்கூடம், கழிவு நீர்க்குழி, மலகூடம் அல்லது வேறுவித மலசல கூடத்தை நீர் மலகூடமாக மாற்றுதல் அல்லது ஏதேனும் அத்தகைய குழிமலகூடம், மறைவுக்கூடம், கழிவுநீர்க்குழி, மலகூடம் அல்லது வேறுவித மலசலகூடத்தை இடித்தழித்தல் ;

(இ) அத்தகைய வளவுகளின் சாக்கடைச் சேவைகளுக்காக நீர் மூலம் அகற்றும் முறையில் சபையின் அனுமதியுடன் இடப்பட்ட ஏதேனும் சாக்கடை அல்லது சாதனம் தவிர்ந்த அவசியமற்றது அல்லது சுகாதாரத்திற்கொவ்வாதது எனச் சபை அபிப்பிராயப்படும் இப்போ

துள்ள ஏதேனும் சாக்கடையை அல்லது சாதனத்தை மீளக்கட்டியமைத்தல், எடுத்தல், அத்துடன் அகற்றுதல்.

(2) ஓராமுட்பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலிற் குறிப்பிடப்பட்ட காலத்துள் அவ்வறிவித்தலின் தேவைப்பாடுகளுக் கிணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது இணங்கியொழுகாது விடுகின்ற ஒவ்வொரு சொந்தக்காரரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமெனபதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

48. (1) அடுத்துள்ளனவாயினுஞ்சரி அல்லது வேறுவகையாக அமைந்துள்ளனவாயினுஞ்சரி, ஒரு தொகுதியான வளவுகளின் சாக்கடைச் சேவையினைத் தனித்தனியாக அமைப்பதைக் காட்டிலும், முழுமையாக அமைத்தல் மிகவுஞ் சிக்கனமானதென அல்லது வேறுவகையாக மிகவும் அநுகூலமானதெனச் சபைக்குத் தோற்றுகின்றவிடத்து, சபை, அத்தகைய வளவுத் தொகுதியின் சாக்கடைச் சேவைக்கான திட்டம் பின்வரும் ஏற்பாடுகளுக் கமைய வகுக்கப்படச் செய்யலாம். கூட்டுச்சாக்கடைச் சேவை.

(2) அத்தகைய விடயம் ஒவ்வொன்றிலும், சபையானது,—

(அ) தொடர்புபட்ட வளவுகளைக் காட்டும் வரைபடங்களும், அவசியமான வேலைப்பாடுகளின் தன்மையும் அளவும் ;

(ஆ) வளவுகளினதும், நிச்சயித்து அறியப்படக்கூடியவாறான அவற்றின் சொந்தக்காரர்களின் பெயர்களினதும் அட்டவணை ;

(இ) அத்தகைய திட்டத்தினை நிறைவேற்றுவதற்குச் சபையின் அபிப்பிராயப்படி, அவசியமான வேலைச் செலவு பற்றிய மதிப்பீடு ;

(ஈ) அவ்வாறு பொறுப்பேற்கப்படும் ஏதேனும் வேலையிலிருந்து வளவுகள் அடையக்கூடியனவாகவுள்ள நன்மையின் பெருமை, சிறுமை அளவிற்கேற்ப அவ் அளவினைக் கருத்துட்கொண்டு. மிகவும் ஒப்புரவானதெனச் சபைக்குத் தோற்றக்கூடிய அத்தகைய விகிதப்படி, தொடர்புபட்ட சொந்தக்காரர்களிடையே அத்தகைய செலவின் அண்ணளவான பங்கீடு,

என்பவற்றைத் தயாரிப்பித்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க உத்தேச வேலைகளைச் செய்விக்கப் போவதான கருத்துப்பற்றி, சாக்கடை அமைக்கப்படவிருக்கும் எல்லா வளவுகளின் சொந்தக்காரர்களுக்கும் சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் உள்ள எழுத்திலான அறிவித்தலொன்றை, அவர்களுக்கு நேரடியாகக் கொடுப்பதன்மூலம்

அல்லது முறையே அவர்களது வதிவிடங்களில் அல்லது தொழிலிடங்களில் விட்டுவைப்பதன்மூலம் அல்லது வதிவிடத்திற்கு அல்லது தொழிலிடத்திற்கு முகவரியிடப்பட்ட பதிவுக் கடிதங்களை அஞ்சலில் அனுப்புவதன்மூலம், சபையானது கொடுப்பிக்கச் செய்தல் வேண்டும்.

(4) அத்தகைய அறிவித்தல் விடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்தின்போது மேற்கூறப்பட்ட விபரங்கள் அல்லது அவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, எல்லா நியாயமான நேரங்களிலும் அவை பார்வை இடப்படுதற்குரியனவாதலும் வேண்டும்.

(5) சொல்லப்பட்ட மாதத்தின்போது, எவையேனும் அத்தகைய வளவுகளின் சொந்தக்காரர் சபைக்கு விடுக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம் பின்வரும் ஏதுக்களுள் எதன்மீதும் உத்தேசத்திட்டத்தை ஆட்சேபிக்கலாம் ; அவையாவன :—

(அ) உத்தேச வேலைகள் இச்சட்டத்திற்கிணங்கப் போதியன அல்ல அல்லது அவசியமற்றன, அல்லது தேவைப்படாதனவென்பது ;

(ஆ) மதிப்பிடப்பட்ட வேலைச் செலவு மிகையானதென்பது ;

(இ) எவையேனும் குறிப்பிட்ட விடயங்களில், (இவை ஆட்சேபத்தில் குறித்துரைக்கப்பட வேண்டியன), அத்தகைய செலவின் அணைவான பங்கீடு பிழையானதென்பது ;

(ஈ) திட்டத்திலிருந்து எவையேனும் வளவுகள் நீக்கப்பட அல்லது சேர்க்கப்படவேண்டுமென்பது :

(உ) அறிவித்தல்கள், வரைபடங்கள் அல்லது மதிப்பீடுகள் தொடர்பில் சில பாரதூரமான முறைமையின்மை, குறைபாடு அல்லது பிழையுளதென்பது ;

(ஊ) கொடுக்கப்பட வேண்டிய ஏதேனும் நட்டஈடு மிகையானது அல்லது போதாததென்பது.

(6) சபை ஆட்சேபனைகளைச் சீர்தூக்கிப் பார்த்துத் தீர்மானித்தல் வேண்டுமென்பதோடு, அவைமீது அதன் முடிவுகள் இறுதியானவையாயிருத்தலும் வேண்டும்.

(7) அத்தகைய ஆட்சேபனைகள் எவையும் எழுப்பப்படாத ஏதேனும் விடயத்தில் அல்லது அத்தகைய ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டு சபையினால் அவை தீர்மானிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில், திட்டத்திற்கிணங்க வளவுகளின் சாக்கடை அமைப்புக்கான கட்டளைகளைச் சபை வழங்கலாமென்பதோடு, உசிதமானதென அது கருதினால்—

(அ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு அவசியமான எல்லா வேலைகளையும் அல்லது அவற்றுள் எதனையும் ஒப்பந்த வேலை மூலம் அல்லது வேறுவகையாக நிறைவேற்றத் தொடங்கலாம் ; அல்லது

(ஆ) வளவுகளின் சாக்கடை அமைப்பில், அல்லது அச்சாக்கடை அமைப்புக்காக மட்டும், செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வேலைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் அறிவித்தலிற் குறிப்பிடப் படக் கூடியவாறான அத்தகைய காலத்துள் ஏற்பாடு செய்யுமாறும் நிறைவேற்றுமாறும் சொந்தக்காரர்கள் எல்லோரையும் அல்லது அவர்களுள் எவரையேனும் எழுத்திலான அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தலாம்.

(8) இப்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வளவுகள் எல்லாவற்றினதும் அல்லது அவற்றுள் எவற்றினதும் சொந்தக்காரர்களிடமிருந்து அளவீட்டுக்கும் வரை படத் தயாரிப்புக்குமான செலவுகளுக்காக நியாயமான தொகையை சமஅளவுகளில் சபை அறவிடலாம்.

(9) இப்பிரிவின் கீழ் எவையேனும் வேலைகள் சபையினால் முற்றாகச் செய்து முடிக்கப்பட்டு அவற்றுக்கான செலவுகள் நிச்சயிக்கப்பட்டவிடத்து, அண்ணளவான பங்கீடு செய்யப்பட்ட அதே முறையில் இறுதியான பங்கீடு செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, அச்செலவுகள் அறவிடப்படுதலும் வேண்டும்.

(10) மேற்சொல்லப்பட்டவாறாக அத்தகைய திட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட சாக்கடைச் சேவைத் தொகுதியைப் பேணுதற்கான செலவு, அத்தகைய திட்டத்தோடு தொடர்புபட்ட வளவுகளின் சொந்தக்காரர்களினால் சமமாகப் பொறுக்கப்படுதல் வேண்டும்.

(11) ஏழு (ஆ) என்னும் உட்பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலிற் குறிப்பிடப்பட்ட காலத்துள் அவ்வறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது ஒழுகாது விடுகின்ற ஒவ்வொரு சொந்தக்காரரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதும் ஐம்பது ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

49. (1) ஏவையேனும் வளவுகளின் சாக்கடைச் சேவைக்கென அமைந்த சாக்கடையின் கழிபொருள்கள் ஏதேனும் சாக்கடையுள் அல்லது சட்டமுறைப்படி சாக்கடைப் பொருள் சென்றடையவிடக் கூடிய வேறு தகுந்த இடத்துள் சென்றடையச் செய்யப்படக்கூடிய ஒரேவழி அல்லது இயலக்கூடிய வழி அவ்வளவுகளின் சொந்தக்காரர் தவிர்ந்த வேறொருவருக்குச் சொந்தமாகவுள்ள ஏதேனும் காணிக்குள்ளாக, காணிக்கூடாக அல்லது காணிக்குக் கீழாக அவற்றை எடுத்துச் செல்வதே எனச் சபைக்குத் தோற்றும்போது, சபை, ஏதேனும் ஆட்சேபத்தைத் தெரிவித்தற்கான நியாயமான சந்தருப்பத்தினை குறித்த காணியின் சொந்தக்காரருக்குக் கொடுத்ததன் பின்னர், ஆட்சேபம் எதுவும் எழுப்பப்படவில்லையாயின் அல்லது எழுப்பப்பட்ட ஏதேனும் ஆட்சேபம் செல்லுபடியற்றதென அல்லது போதாததெனச் சபைக்குத் தோற்றுமாயின், எழுத்திலான கட்டளைமூலம், அனுமதிக்கத் தகுந்ததெனச் சபை கருதும் அத்தகைய முறையில்

வேறாட்களுக்குச் சொந்தமான காணிக்கூடாகச் சாக்கடை அமைப்பை இடுவதற்குள்ள தத்துவம்.

அவரது சாக்கடையைக் குறித்த காணிக்குள்ளாக, காணிக்கூடாக அல்லது காணிக்குக் கீழாக இடுவதற்கு குறித்த வளவுகளின் சொந்தக்காரருக்கு அதிகாரமளிக்கலாம்.

(2) சபையின் பொது முகாமையாளரின் ஒப்பத்தைக் கொண்டுள்ள அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும், அது எந்த ஆளின் பெயரில் செய்யப்பட்டதோ அந்த ஆளுக்கு அல்லது அந்நோக்கத்திற்கென அவரினல் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் முகவருக்கு அல்லது ஆளுக்கு, அவ்வாறு செய்யப்போவதுபற்றிய அவரது கருத்துப்பற்றி எழுத்துமூலம் நியாயமான அறிவித்தலை அத்தகைய காணியின் சொந்தக்காரருக்குக் கொடுத்ததன் பின்னர், சூரியன் உதிப்பதற்கும் மறைவதற்கும் இடையில் எந்நேரத்திலும் உதவியாளர்களுடனும் வேலையாட்களுடனும் குறித்த காணியுள் புகுவதற்கும் அவசியமான வேலையை நிறைவேற்றுவதற்கும பூரண அதிகாரமாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எவையேனும் வளவுகளின் சொந்தக்காரர் அல்லது அவற்றிற் குடியிருப்பவர் அல்லது அந்நோக்கத்திற்கென அவரினல் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் முகவர் அல்லது ஆள், எவையேனும் வளவுகளின் சாக்கடைச் சேவைக்கெனச் சாக்கடையொன்று ஏற்கனவே சட்டப்படி கட்டியமைக்கப்பட்டுள்ள அவ்வளவுகளின் சொந்தக்காரருக்கு அவ்வாறு செய்யப்போவது பற்றிய அவரது கருத்துப்பற்றி எழுத்து மூலம் நியாயமான அறிவித்தலைக் கொடுத்ததன் பின்னர், அத்தகைய சாக்கடையினைப் பழுதுபார்க்கும் அல்லது சுத்தப்படுத்தும் நோக்கத்திற்காகச் சூரியன் உதிப்பதற்கும் மறைவதற்கும் இடையில் எந்நேரத்திலும் உதவியாளர்களுடனும் வேலையாட்களுடனும் குறித்த காணியுள் புகலாம்.

(4) இப்பிரிவின்கீழ் ஏதேனும் வேலையை நிறைவேற்றுகையில் எவ்வளவு குறைவாக முடியுமோ அவ்வளவு குறைவான சேதம் இழைக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் எவ்வளவுகளின் சொந்தக்காரரது அல்லது குடியிருப்பாளரது நன்மைக்கென அவ்வேலை செய்யப்பட்டுள்ளதோ அச்சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர்—

(அ) இயலக்கூடிய அளவில் தாமதமின்றி வேலையினை நிறைவேற்றுவித்தல் வேண்டும் ;

(ஆ) குறித்த வேலையை நிறைவேற்றும் நோக்கத்திற்காக உடைக்கப்பட்ட எதுவேனும் தரையமைப்பைத் தமது சொந்தச் செலவில் நிரப்பி, நிரவி, சரிப்படுத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) குறித்த வேலையை நிறைவேற்றுவதன் மூலம் நட்டமுறும் எவரேனுமாளுக்கு நட்டஈடு கொடுத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் வேலை நிறைவேற்றப்படுதலை நியாயமான காரணமின்றி அனுமதிக்க மறுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற காணிச் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு

மென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும். அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அத்தகைய வேலை நிறைவேற வொட்டாது அவ்வாறு தொடர்ந்து மறுக்கின்ற அல்லது அவ்வாறு தொடர்ந்து தடுக்கின்ற அத்தகைய சொந்தக்காரர் ஒவ்வொருவரும் தொடர்ந்து புரியப்படும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, அத்தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாவுக்கு மிகாத குற்றப் பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்.

(6) ஏதேனும் காணியின்மீது கட்டிடமெதுவும் இல்லாதிருந்தபோது, இப்பிரிவின்கீழ் அக்காணிக்குள், அக்காணிக்கூடாக அல்லது அக்காணிக்குக் கீழாகச் சாக்கடையொன்று அமைக்கப்பட்டுள்ள அக்காணிச் சொந்தக்காரர் அதன் பின்னர் எந்நேரத்திலும் அக் காணியின்மீது கட்டிடமொன்றைக் கட்டவிரும்புகின்றபோது, சபை, எழுத்திலான அறிவித்தல்மூலம், எவ்வளவுகளின் சொந்தக்காரரது அல்லது குடியிருப்பவரது நன்மைக்கென அத்தகைய சாக்கடை கட்டியமைக்கப்பட்டுள்ளதோ அச்சொந்தக்காரரை அல்லது குடியிருப்பாளரை, சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் அதனை மூடிவிடுமாறும் அல்லது அகற்றுமாறும் அல்லது திசைதிருப்புமாறும் அல்லது மீளக் கட்டியமைக்குமாறும் அல்லது பாதுகாக்குமாறும் காணியை நிரவி, நிரப்பிச் சரிப்படுத்துமாறும் தேவைப்படுத்தலாம் :

எனினும், உத்தேசக் கட்டிடத்தின் கட்டுவேலையை அனுமதிப்பதற்கு அல்லது கட்டிடத்தினைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவதற்கு அத்தகைய சாக்கடை மூடப்படுதல், அகற்றப்படுதல், திசைதிருப்பப் படுதல், மீளக்கட்டியமைக்கப்படுதல் அல்லது பாதுகாக்கப்படுதல் சபையின் அபிப்பிராயப்படி அவசியமானதாக அல்லது உசிதமானதாகவிருந்தாலொழிய, அத்தகைய தேவைப்பாடு எதுவும் விதிக்கப்படுதலாகாது.

(7) ஆறும் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட அறிவித்தல் எதனதும் தேவைப்பாடுகளுக்கு நியாயமான காலத்துள் இணங்கியொழுக மறுக்கின்ற சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்காளாதலும் வேண்டும்.

சாக்கடைகளைக் கூட்டாகப் பயன்படுத்துவதற்குச் சொந்தக் காரர்களுக்குள்ள உரிமை.

50. (1) எவையேனும் வளவுகளின் சாக்கடைச் சேவைகளுக்கென அமைந்த சாக்கடையின் கழிவுப் பொருள் ஏதேனும் சாக்கடையுள் அல்லது சட்டமுறைப்படி சாக்கடைப்பொருள் சென்றடையவிடக்கூடிய வேறு தகுந்த இடத்துள் சென்றடையச் செய்யக்கூடிய ஒரேவழி அல்லது இயலக்கூடிய வழி, சொல்லப்பட்ட வளவுகளின் சொந்தக்காரர் தவிர்ந்த வேறோராளுக்கு அல்லது ஆட்களுக்குச் சொந்தமாகவுள்ள சாக்கடைக்கூடாகவே எனச் சபைக்குத் தோற்றுகின்றவிடத்து, சபை, அதற்கான ஏதேனும் ஆட்சேபத்தைத் தெரிவித்தற்கான நியாயமான சந்தருப்

பத்தினைச் சொல்லப்பட்ட ஆளுக்கு அல்லது ஆட்களுக்குக் கொடுத்த தன் பின்னர், ஆட்சேபம் எதுவும் எழுப்பப்படவில்லையாயின், அல்லது எழுப்பப்பட்ட ஏதேனும் ஆட்சேபம் செல்லுபடியற்றதெனஅல்லது போதாததெனச் சபைக்குத் தோற்றுமாயின், எழுத்திலான கட்டளைமூலம், குறித்த சொந்தக்காரர் இறுதியாகக் கூறப்பட்ட சாக்கடையைப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கலாம், அல்லது வாடகை அல்லது நட்டஈடு கொடுத்தல் பற்றியும், மேற்சொல்லப்பட்டவாறாகக் குறித்த ஊழவசயின் சாக்கடையை அத்தகைய வேறு சாக்கடையுடன் தொடுத்தல் பற்றியும் அத்தகைய இறுதியாகக் கூறப்பட்ட சாக்கடையைப் பேணுதல், நீரடித்தல், சுத்தப்படுத்துதல், வெற்றுக்குதல் என்பவற்றுக்கான அல்லது வேறுவிதமாகத் திறத்தவருக்குள்ள பொறுப்புக்களை பற்றியும் நெறிமுறையானதெனச் சபைக்குத் தோற்றக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகள்மீது அவரை அதன் கூட்டுச் சொந்தக்காரராக அல்லது கூட்டுச் சொந்தக்காரர்களுள் ஒருவராக வெளிப்படுத்தலாம்.

(2) சபையின் பொதுமுகாமையாளரின் ஒப்பத்தைக் கொண்டுள்ள அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும், அது எந்த ஆளின் பெயரில் செய்யப்பட்டதோ அந்த ஆளுக்கு அல்லது அந்நோக்கத்திற்கென அவரினால் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் முகவருக்கு அல்லது ஆளுக்கு அவ்வாறு செய்யப்போவதுபற்றிய அவரது கருத்துப்பற்றி எழுத்துமூலம் நியாயமான அறிவித்தலை அத்தகைய சாக்கடையின் சொந்தக்காரருக்கு அல்லது சொந்தக்காரர்களுக்குக் கொடுத்ததன் பின்னரும், கட்டளையிலுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றிய பின்னரும் சூரியன் உதிப்பதற்கும் மறைவதற்கும் இடையில் எந்நேரத்திலும் உதவியாளர்களுடனும் வேலையாட்களுடனும் அத்தகைய சாக்கடையமைந்துள்ள காணியுள் புகுவதற்கும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய—

(அ) இரண்டு சாக்கடைகளையும் தொடுத்தல் ;

(ஆ) தொடுப்பினைப் புதுப்பித்தல், மாற்றுதல் அல்லது பழுது பார்த்தல் ; அத்துடன்

(இ) சாக்கடையினை அல்லது அதன் ஏதேனும் பாகத்தினைப் பேணுதல், நீரடித்தல், சுத்தப்படுத்துதல் அல்லது வெற்றுக்குதல் தொடர்பில் எவ்வாளின் சார்பில் சபையின் கட்டளை செய்யப்பட்டதோ அவ்வாளுக்குள்ள ஏதேனும் பொறுப்பினை நிறைவேற்றுதல்,

எனபவற்றுக்கு அவசியமான அத்தகைய எல்லாச் செயல்களைச் செய்வதற்கும் பூரண அதிகாரமாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் ஏதேனும் வேலையை நிறைவேற்றுகையில் எவ்வளவு குறைவாக முடியுமோ அவ்வளவு குறைவான சேதம் இழைக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் எவ்வாளின் சார்பில் சபையின் கட்டளை ஆக்கப்பட்டுள்ளதோ அவ்வாள்—

(அ) இயலக்கூடியஅளவில் தாமதமின்றி வேலையினை நிறைவேற்றுவித்தல் வேண்டும் ;

(ஆ) சொல்லப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதன் காரணமாக உடைக்கப்பட்ட நிலத்தினைத் தமது சொந்தச் செலவில் நிரவி, நிரப்பி, மூடிவிடுதல் வேண்டும்; அத்துடன் கட்டிடங்களுக்கு ஏறபட்ட சேதத்தைத் சொந்தச் செலவில் பழுது பார்த்துச் சீராக்குதல் வேண்டும்; அத்துடன்

(இ) குறித்த வேலைகளை நிறைவேற்றுவதன்மூலம் நட்டமுறும் எவரேனுமாளுக்கு நட்டஈடு கொடுத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் வேலை நிறைவேற்றப்படுதலை நியாயமான காரணமின்றி அனுமதிக்க மறுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற காணிச் சொந்தக்காரர் அல்லது அதிற் குடியிருப்பவர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்; அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அத்தகைய வேலை நிறைவேறவொட்டாது அவ்வாறு தொடர்ந்து மறுக்கின்ற அல்லது அவ்வாறு தொடர்ந்து தடுக்கின்ற அத்தகைய சொந்தக்காரர் அல்லது அதிற் குடியிருப்பவர் ஒவ்வொருவரும் தொடர்ந்து புரியப்படும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, மேற்சொல்லப்பட்டவாறான குற்றத்தீர்ப்பின்மேல் அவ்வாறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

**51.** (1) ஒவ்வொரு சாக்கடையும் அதனோடு தொடர்புபட்ட ஒவ்வொரு பொருத்தியும் அல்லது சாதனமும், அச்சாக்கடை அமைந்திருக்கக்கூடிய வளவுகளின் சொந்தக்காரரால், அல்லது அவற்றிற் குடியிருப்பவரால் காலத்துக்குக்காலம் பழுதுபார்க்கப்படுதல் வேண்டும், நீரடிக்கப்படுதல் வேண்டும், சுத்தமாக்கப்படுதல் வேண்டும், அத்துடன் துப்பரவாக்கப்படுதலும் வேண்டும்.

சாக்கடைகள் முதலியனவற்றைப் பேணுதலும் பழுதுபார்த்தலும்.

(2) சபை, அத்தகைய வளவுகளின் சொந்தக்காரருக்கு அல்லது அவற்றிற் குடியிருப்பவருக்கு விடுக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம், அறிவித்தலிற் குறிப்பிடப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துள் அத்தகைய சாக்கடை, பொருத்தி அல்லது சாதனத்தைப் பழுதுபார்க்குமாறு, நீரடிக்குமாறு, சுத்தப்படுத்துமாறு அல்லது துப்பரவாக்குமாறு அத்தகைய சொந்தக்காரரை அல்லது அதிற் குடியிருப்பவரைத் தேவைப்படுத்தலாம்.

(3) சபை, அவ்வறிவித்தலின் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படவில்லையாயின் அல்லது அவ்வாறு செய்யுமாறு குறித்த சொந்தக்காரரிடமிருந்து அல்லது அதிற் குடியிருப்பவரிடமிருந்து சபை விண்ணப்பமொன்றைப் பெற்றால் அல்லது உடனடி நடவடிக்கை அவசியமானதெனச் சபை கருதினால் அத்தகைய சாக்கடை, பொருத்தி அல்லது சாதனத்தைப் பழுதுபார்க்கலாம், நீரடிக்கலாம், சுத்தப்படுத்தலாம், அல்லது துப்பரவாக்கலாம்; அத்துடன் அதன்மூலம் உறப்பட்ட செலவுகள் சொல்லப்பட்ட

சொந்தக்காரரினால் அல்லது குடியிருப்பாளரினால் கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, அவ்வாறு கொடுக்கத் தவறும் விடயத்தில் சாக்கடைச்சேவைக் கட்டணம் என்றுற்போன்று அது அறவிடப் படக்கூடியதாதலும் வேண்டும்.

(4) எவையேனும் வளவுகளிற் குடியிருப்பவர்களின் பொதுப் பயன்பாட்டுக்கெனச் சாக்கடைகள், அவற்றேடு தொடர்புபட் பொருத்திகள், மற்றும் சாதனங்கள் என்பன ஏற்பாடுசெய்யப் பட்டுள்ள அவ்வளவுகளின் சொந்தக்காரர்கள், அத்தகைய சாக் கடைகள், பொருத்திகள், சாதனங்கள் என்பவற்றை முறையான சுகாதார நிலைமையில் வைத்திருப்பதற்கு அவசியமாகக்கூடிய வாறன அத்தகைய ஏற்பாட்டினைச் செய்தலும் அத்தகைய நட வடிக்கைகளை எடுத்தலும் வேண்டும். சபையினால் அதற்கென விடுக்கப்பட்ட தகுந்த அறிவித்தலின் பின்னர் சபை தகுந்த தெனக் கருதும் அத்தகைய ஏற்பாட்டைச் செய்ய அல்லது அத் தகைய வழிவகையைக் கையாளத் தவறும் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(5) சபைக்குரித்தாக்கப்பட்ட சாக்கடையாகவிராத, ஏதேனும் சாக்கடை, அல்லது ஏதேனும் பொருத்தி அல்லது சாதனம், ஒன்றுக்கு மேற்பட்ட வளவுகளின் நன்மைக்கென ஏற்பாடுசெய் யப்பட்டுள்ளவிடத்து, சபை, இப்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி எழுத்திலான அறிவித்தல்மூலம், அவ்வறிவித்தலிற் குறிக்கப்படக் கூடியவாறன அத்தகைய காலத்துள் மேற்சொல்லப்பட்ட வேலை கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையேனும் நிறை வேற்றுமாறு அத்தகைய வளவுகளின் சொந்தக்காரரை அல்லது அவற்றிற் குடியிருப்பவரைத் தேவைப்படுத்தலாம் ; அத்துடன் அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கிணங்கியொழுகத் தவறிய விடயத்தில் அல்லது அத்தகைய அறிவித்தல் இல்லாமல் அவசியமானதெனச் சபை கருதின், அத்தகைய வேலைகள் எல்லா வற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் அது நிறைவேற்றலாம் என்பதோடு, அது நீதியானதெனக் கருதும் அத்தகைய விகிதங் களிற் குறித்த சொந்தக்காரரிடமிருந்து அல்லது குடியிருப் பாளர்களிடமிருந்து அவ்வாறு செய்ததற்கான செலவுகளையும் அறவிடலாம்.

(6) இரண்டாமுட்பிரிவின்கீழ் அல்லது (5) ஆம் உட்பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலிற் குறிப்பிடப்பட்ட காலத்துள் அவ்வறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கிணங்கியொழு கத் தவறுகின்ற அல்லது அவ்வாறு இணங்கியொழுகாதுவிடு கின்ற சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதி வானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதும் ஐம்பது ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

பழுதடைந்த சாக்கடைகளேயும் சாதனங்களேயும் மீளக்கட்டியமைத்தல்.

52. (1) சபையின் அபிப்பிராயப்படி—

(அ) எவையேனும் வளவுகளுக்கான சாக்கடைச்சேவைகளுக்கென ஏற்பாடுசெய்யப்பட்ட எவையேனும் சாக்கடைகள் அல்லது அவற்ருேடு சம்பந்தப்பட்ட எவையேனும் பொருத்திகளும் சாதனங்களும் பழுதடைந்தனவாக அல்லது உடனலத்துக்கு ஊறுவிளேவிக்கும் நிலேயில் இருக்கின்றவிடத்து ;

(ஆ) எவையேனும் அத்தகைய சாக்கடைகள் அல்லது சாதனங்கள் எதேனும் பொதுச் சாக்கடையுடன் அல்லது வேறு சாக்கடையுடன் முறையற்றவகையில் தொடுக்கப்பட்டிருக்கின்றவிடத்து ; அல்லது

(இ) முறையானவையும் போதுமானவையுமான பொறிகள், நீர்க்கழிகால்கள், காற்ருேட்டவாயில்கள், பரிசோதனேயறைகள் அல்லது அத்தகைய வேறுசாதனங்கள் எவையேனும் அத்தகைய சாக்கடைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிராதவிடத்து,

சபை, அத்தகைய வளவுகளின் சொந்தக்காரருக்கு அல்லது அவற்றிற் குடியிருப்பவருக்கு விடுக்கப்படும் எழுத்திலான அறிவித்தல்மூலம், அவ்வறிவித்தலிற் குறிப்பிடப்படக்கூடியவாருன அத்தகைய காலத்துள் அவ்வாறு பழுதடைந்த அல்லது முறையற்ற சாக்கடைகள், தொடுப்புக்கள், பொருத்திகள், சாதனங்கள் என்பவற்றை மீள இடுமாறும், மீளக்கட்டியமைக்குமாறும், சீராக்குமாறும், தொடுப்பறுக்குமாறும் அல்லது இடித்தழிக்குமாறும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இதன்கீழாக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும் இணங்கப் போதுமானவையும் பொருத்தமானவையுமான சாக்கடைகள், தொடுப்புக்கள், பொருத்திகள், சாதனங்கள் என்பனவற்றை ஏற்பாடு செய்யுமாறும் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராமுட்பிரிவின்கீழ் சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு விடுக்கப்படும் ஏதேனும் அறிவித்தலிற் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள்ளாக அவ்வறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது ஒழுகாதுவிடுகின்ற அத்தகைய சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் தவருென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானெருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு மாளாதலும் வேண்டும்.

(3) எவையேனும் அத்தகைய சாக்கடைகள் தொடுப்புக்கள், பொருத்திகள், அல்லது சாதனங்கள் பழுதடைந்துள்ளனவா அல்லது உடனலத்துக்கு ஊறுவிளேவிப்பனவா அல்லது ஏதேனும் பொதுச் சாக்கடையுடன் அல்லது வேறு சாக்கடையுடன் முறையற்ற வகையில் தொடுக்கப்பட்டுள்ளனவா எனத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, சபை, நியாயமான எந்நேரத்திலும் அவ்வளவுகளேப் பார்வையிடுமாறு கட்டளேயிடலாம்; பரிசோதிக்கும் அலுவலர் (குடியிருப்பாளருக்கு முறையாக அறிவித்தல் கொடுத்ததன்

பின்னர்) நியாயமான எந்நேரத்திலும் அவ்வளவுகளுள் புகலாம் என்பதோடு, அத்தகைய பரிசோதனைக்கு அவசியமாயின் எவ்வளவு குறைவாகச் சேதம் இழைக்கமுடியுமோ அவ்வளவு குறைவான சேதத்துடன் அவர் தகுதியானதெனக் கருதும் இடத்தில் மண்ணையும் தோண்டுவிக்கலாம்; அத்துடன் அத்தகைய சாக்கடைகள், தொடுப்புக்கள், பொருத்திகள் அல்லது சாதனங்கள் திருத்தியான நிலையில் இருப்பனவாகக் காணப்படின், அவை உடனடியாகப் பழைய நிலையில் இடப்படுதல் வேண்டுமென்பதோடு, சபையின் செலவில் அத்தகைய இடம் நிரவப்பட்டுச் சீராக்கப்படுதலும் வேண்டும்.

வீதிகளுக்குக் கீழாக இடப்பட்ட சாக்கடைகள் அல்லது சாதனங்கள்.

53. எவையேனும் வளவுகளின் சாக்கடைச்சேவைக்கென இச்சட்டத்தினைப் பின்பற்றித் தேவைப்படும் ஏதேனும் சாக்கடை, ஆள் நுழை துவாரம், பரிசோதனையறை, நீர்க்கழிகால், காற்றேற்டவாயில், அல்லது அதுபோன்ற வேறு சாதனம் ஏதேனும் தெருவுக்கு அல்லது பொது இடத்திற்கு மேலாக, அதற்கு ஊடாக, அல்லது கீழாகக் கட்டியமைக்கப்பட, இடப்பட அல்லது பொருத்தப்பட சபை அனுமதிக்கலாம் :

எனினும், அத்தகைய அனுமதி, குறித்த தெருவின் அல்லது பொதுவிடத்தின்மீது அத்தகைய வளவுகளின் சொந்தக்காரருக்கு எத்தன்மைத்தாயினுமான எவையேனும் சிறப்புரிமைகளை அளிப்பதாகக் கருதப்படுதலாகாது. சபை, எந்நேரத்திலும், அது அவசியமானதெனக் கருதும் அத்தகைய சாக்கடையின் அல்லது சாதனத்தின் எப்பகுதியினையும் மாற்றலாம் அல்லது மீளக் கட்டியமைக்கலாம்.

வளவுகளுக்குள் புகுதல்.

54. (1) ஏதேனும் சாக்கடையை, ஆள் நுழை துவாரத்தை, பரிசோதனையறையை, நீர்க்கழிகாலை, காற்றேற்டவாயிலை அல்லது அதனோடு தொடர்புபட்ட வேறு சாதனத்தைப் பரிசோதிக்கும், நீரடிக்கும், பழுதுபார்க்கும், அல்லது பேணும் நோக்கத்திற்காக சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்படும் எவரேனுமாள், குடியிருப்பாளருக்கு முறையான அறிவித்தலைக் கொடுத்ததன் பின்னர் காலை எட்டுமணிக்கும் மாலை ஐந்துமணிக்குமிடையில் எவையேனும் வளவுகளுள் புகலாம் :

எனினும், ஏதேனும் பொதுச்சாக்கடையினைப் பரிசோதிக்கும், நீரடிக்கும் அல்லது பேணும் நோக்கத்திற்காக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள், ஏதேனும் தொல்லைக்குக் காரணம் என நம்புவதற்கு நியாயமுள்ள ஏதேனும் சாக்கடையை அல்லது மேற் சொல்லப்பட்ட வேறுசாதனத்தைப் பரிசோதிக்கும் நோக்கத்திற்காகப் புகும் சந்தருப்பங்களில் அத்தகைய அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டியதில்லை.

(2) மேற்சொல்லப்பட்டவாறாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளை எவையேனும் வளவுக்குள் புகுவதிலிருந்து தடைசெய்கின்ற அல்லது தடைசெய்ய எத்தனிக்கின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் ஐம்பது ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கும், அதற்

காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு புகுவதனைத் தொடர்ந்து மறுக்கின்ற ஒவ்வோர் ஆளும் தொடர்ந்து புரியப்படும் தவறுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும் ; அத்துடன் மேற் சொல்லப்பட்டவாறான குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் தவறு தொடர்ந்து புரியப்படும் காலத்தின்போது ஒவ்வொரு நாளுக்காகவும் இருபத்தைந்து ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு அவர் ஆளாதலும் வேண்டும்.

புதிய சாக்கடைகள் அனுமதியின்றிப் பயன்படுத்தப்படலாகாதென்பது.

55. (1) இச்சட்டத்தினைப் பின்பற்றி ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் புதிய சாக்கடையை, நீர்க்கழிகாலை, குளிப்பறையை, நீர்மலகூடத்தை, மறைவுக்கூடத்தை, சலகூடத்தை அல்லது வேறு சுகாதார சாதனத்தை சபையின் எழுத்திலான அனுமதியின்றி அல்லது அத்தகைய சாக்கடை, நீர்க்கழிகால், குளிப்பறை, நீர்மலகூடம், மறைவுக்கூடம், சலகூடம் அல்லது வேறு சுகாதாரச் சாதனம் எல்லா வழிகளிலும் இச்சட்டத்தினதும் இதன்கீழாக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கமையவுள்ளனவெனச் சபை சான்றிதழைக் கொடுக்கும் வரை, பயன்படுத்துகின்ற அல்லது பயன்படுத்தச் செய்கின்ற அல்லது பயன்படுத்தவிடுகின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் ஐம்பது ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்குமாளாதலும் வேண்டும் ; அத்துடன் அதற்காகக்குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதனமேல், அத்தகைய சான்றிதழை அல்லது அனுமதியைப் பெறாது மேற்சொல்லப்பட்ட ஏதேனும் மலசலகூடச் சாதனத்தைப் பயன்படுத்துகின்ற அல்லது பயன்படுத்துவிக்கின்ற அல்லது பயன்படுத்தவிடுகின்ற ஒவ்வோராளும் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, மேற்சொல்லப்பட்டவாறான குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் அத்தகைய தொடர்ந்து புரியப்படும் காலத்தின்போது ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்துக்குமாளாதலும் வேண்டும்.

(2) அவ்விதம் புதிதாக ஏற்பாடுசெய்யும் ஆள் எவரும் அத்தகைய சான்றிதழுக்கெனச் சபைக்கு எழுத்தில் விண்ணப்பிக்கலாம் ; அத்துடன் அதன்மேல், சபை, அது அவசியமெனக் கருதக்கூடிய அத்தகைய விசாரணையைச் செய்தபின்னர், விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் பதினான்கு நாட்களுக்குள் சான்றிதழை வழங்குதல் வேண்டும் அல்லது அவ்வாறு வழங்க மறுப்பதாக அறிவித்தல் வேண்டும்; அப்பொழுது அம்மறுப்பிற்கான காரணங்களும் அறிவிக்கப்படல் வேண்டும்.

தவறுகள்.

56. (1) ஆளெவரும எதேனும் வடிகாலுள் அல்லது கழிவுப் பொருள் செல்லுவதற்குப் பொருத்தமற்ற அல்லது அவ்வாறு கருதப்படாத வேறு இடத்துள் அல்லது தொல்லை விளைக்கக்கூடிய அத்தகைய முறையில் ஏதேனும் காணியுள் அல்லது இடத்துள் சபையின் எழுத்திலான அனுமதியின்றி, ஏதேனும் சாக்கடைச் சகதியை, அழுக்குத் திரவங்களை அல்லது மலமண்டிகளைச் செலுத்துதல் அல்லது செலுத்துவித்தல் அல்லது சென்றடையவிடுதல்

அல்லது அழுக்குநீர் செல்வதற்கெனக் கருதப்பட்ட எதேனும் சாக்கடையுள் எதேனும் மழை நீரை வேண்டுமென்று செலுத்துதல் அல்லது சென்றடையவிடுதல் ஆகாது.

(2) சாக்கடையை அல்லது சாக்கடைப் பொருளின் ஓட்டத்தை அல்லது அதன் பரிகரிப்பையும் ஒழித்தலையும் அல்லது அதன் கண் செல்லும் நீரைப் பாதிக்கக்கூடிய அல்லது அதன் தன்மை காரணமாக, வெப்பநிலை காரணமாக, அல்லது வேறுவகையாகத் தொல்லையை ஏற்படுத்தக்கூடிய எதேனும் வெப்பநீரை, நீராவியை, அல்லது வேறுதிரவத்தை எதேனும் சாக்கடையுள் ஆள் எவரும் செலுத்துதல் அல்லது செலுத்துவித்தல் அல்லது சென்றடையவிடுதல் ஆகாது.

(3) ஆளெவரும் சாக்கடையுள் செலுத்துவதற்குக் கருதப்படாத அல்லது அதன் தொகை அல்லது தன்மைகாரணமாக அத்தகைய சாக்கடையை அல்லது அதனோடு தொடர்புபட்ட வேறேதேனும் சாக்கடையைத் தடுக்கக்கூடிய அல்லது அத்தகைய சாக்கடையை அல்லது அதன்கண்ணுள்ள சாக்கடைப் பொருளின் ஓட்டத்தைப் பங்கமாகப் பாதிக்கக்கூடிய அல்லது தொல்லை விளைவிக்கக்கூடிய எதேனும் செங்கல்லை, கல்லை, மண்ணை, சாம்பலை அல்லது வேறு பதார்த்தத்தை அல்லது பொருளை எதேனும் சாக்கடைக்குள் அல்லது சாக்கடையில் போடுதல், செலுத்துதல் அல்லது வைத்தல் அல்லது போடுவித்தல், செலுத்துவித்தல் அல்லது வைப்பித்தல் அல்லது போடவிடுதல், செலுத்தவிடுதல் அல்லது வைக்கவிடுதல் ஆகாது.

(4) சபையின் எழுத்திலான அனுமதியின்றி ஆளெவரும் எவ்வகையிலும் எதேனும் வடிகாலின், காற்றோட்டக்குழாயின், மலசலகூடத்தின், அல்லது அவற்றோடு தொடர்புபட்ட வேறு பொருத்திகளின் அல்லது சாதனங்களின் பொருத்துநிலையை, இடவமைதியை, அல்லது நிலையைத் திருத்துதல் அல்லது தடைசெய்தல், அகற்றுதல், அடைத்தல் அல்லது மாற்றுதல் ஆகாது.

(5) எதேனும் கட்டிடத்தில் அல்லது அதன் நன்மைக்கென அல்லது அதே வளவுகளுக்குள் இருக்கும் வேறேதேனும் கட்டிடத்தின் நன்மைக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதேனும் சாக்கடை, மலசலகூடம், அல்லது வேறு சாதனம் இச்சட்டத்தின் அல்லது இதன் கீழாக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு முரணாகும்வகையில் ஆளெவரும் அக்கட்டிடத்தைக் கட்டுதல், மீளக்கட்டுதல் அல்லது மாற்றுதல் ஆகாது.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுள் எதனையேனும் மீறுகின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் ஐம்பது ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அவ்வாறு தொடர்ந்து மீறுகின்ற ஒவ்வோர் ஆளும் தொடர்ந்து புரியப்படும்

தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, மேற்சொல்லப்பட்டவாறான குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், அத்தவறு புரியப்படும்போது ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்குமாளாதலும் வேண்டும்.

## பாகம் III

## எவையேனும் அரசாங்க நீர்வழங்கல், சாக்கடைச் சேவைப் பொறுப்பு முயற்சிகளையும் வேறு நீர், சாக்கடைச் சேவைப் பொறுப்பு முயற்சிகளையும் சபைக்கு மாற்றுதல்

**57.** (1) இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபின்னர் எவ்வளவு விரைவாக வசதியோ அவ்வளவு விரைவாக, அமைச்சரானவர், கட்டளைமூலம், நீர்வழங்கல், வடிகால் சேவைத் திணைக்களத்தின் பொறுப்பு முயற்சிகளைச் சபைக்கு மாற்றுதல் வேண்டும் என்பதோடு, அதே கட்டளை மூலம் அல்லது அதன் பின்னர் இடப்படுங் கட்டளைமூலம்— *எவையேனும் அரசாங்க நீர்வழங்கல், சாக்கடைச் சேவைப் பொறுப்பு முயற்சிகளைச் சபைக்கு மாற்றுதல்.*

(அ) சபையின் நோக்கங்களுக்குத் தேவைப்படும் குடியரசினது ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைச் சபைக்கு மாற்றுவதற்கும், அதற்கு உரித்தாக்குவதற்கும் ;

(ஆ) அத்தகைய பொறுப்புமுயற்சிகளோடு சம்பந்தப்பட்ட அல்லது அவை தொடர்பிலான எல்லா அல்லது எவையேனும் உரிமைகளையும், கடப்பாடுகளையும், பொறுப்புக்களையும் சபைக்கு மாற்றுவதற்கும், அத்தகைய உரிமைகளையும், கடப்பாடுகளையும், பொறுப்புக்களையும் சபைக்கு அவ்வாறு மாற்றுவதற்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக ஒப்பந்தங்களை அல்லது வேறு சாதனங்களை இயைபாக்குவதற்கும் அல்லது திரிபுபடுத்துவதற்கும் ;

(இ) அரசாங்கத்திற்குப் பதிலாக அத்தகைய பொறுப்புமுயற்சிகளைக் கொண்டு நடாத்தலைச் சபைக்கு இயலச் செய்யும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அளவுக்கு எழுத்திலான ஏதேனும் சட்டத்தை இயைபாக்குவதற்கும் அல்லது திரிபுபடுத்துவதற்கும் ;

(ஈ) அத்தகைய ஏதேனும் மாற்றத்தின்விளைவாக அரசாங்கத்திற்கும் சபைக்கும் இடையே அவசியமாகக்கூடிய அத்தகைய நிதிச் சமன்பாடுகளைச் செய்வதற்கும் ; அத்துடன்

(உ) சட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடாத்தல் உட்பட, மேற்சொல்லப்பட்ட கருமங்களுக்குக் குறைநிரப்பான அல்லது அக்கருமங்களின் விளைவான வேறேதும் கருமத்திற்கும்,

ஏற்பாடும் செய்யலாம்.

(2) ஓராமுட்பிரிவின்கீழ் அமைச்சராலாக்கப்படும் எதேனும் கட்டளையின் ஏற்பாடுகள், அவரின் பின்னைய கட்டளைமூலம் காலத்திற்குக்காலம் திருத்தப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

(3) ஓராமுட்பிரிவின்கீழ் அல்லது இரண்டாமுட்பிரிவின் கீழ்—

(அ) அரச காணிகள் என்றும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாடின்றி, குடியரசுக்குரிய எதேனும் அசைவற்ற ஆதனத்தைப் பாதிக்கும் கட்டளை எதுவும் ; அல்லது

(ஆ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் முன்னொருப்பாடின்றி, ஓராமுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட கருமம் எதனையும் பாதிக்கும் கட்டளை எதுவும் ,

அமைச்சரால் ஆக்கப்படுதலாகாது.

(4) இப்பிரிவின்கீழ் அமைச்சராலாக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் கசற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறிப்பிடப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(5) அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும், இதனகத்திதன் முன்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக நடைமுறைக்கு வரும்பொழுது, இதன்கண் சட்டமாக்கப்பட்டாற்போன்று வலுவும் பயனும் உளதாதல் வேண்டும்.

தன்னிச்சையான மாற்றற்றிட்டம்.

58. (1) இரண்டாமுட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சபையும் எதேனும் உள்ளூரதிகாரசபையும் தமது சொந்தப் பிரேரணை மூலம் அத்தகைய அதிகாரசபையினால் கொண்டுநடாத்தப்பட்ட நீர்வழங்கல் அல்லது சாக்கடைச் சேவைப் பொறுப்புமுயற்சியைச் சபைக்கு மாற்றுவதற்காக, இச்சட்டத்தின்கண் இனிமேல் " தன்னிச்சையான மாற்றற்றிட்டம் " எனக் குறிப்பீடு செய்யப்படும் மாற்றற்றிட்டமொன்றைக் கூட்டாகத் தயாரிக்கலாம்.

(2) தன்னிச்சையான மாற்றற்றிட்டம் ஒன்றைத் தயாரித்தல் தொடர்பிலான எதேனும் கருமத்தின்மீது அல்லது பிரச்சினையின்மீது சபைக்கும் உள்ளூரதிகாரசபைக்கும் எழும் எதேனும் பிணக்கு ஒரு முடிவுக்கென அமைச்சருக்குச் சபையினால் ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஆற்றுப்படுத்தல்மீது அமைச்சரின் முடிவு முற்றானதும் முடிவானதுமாதலும் வேண்டும்; அத்துடன் அது நீதிமன்றம் அல்லது நியாயசபையெதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

59. சபையானது, 60 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரினால் அவ்வாறு செய்யும்படி பணிக்கப்பட்டபோதெல்லாம், ஓர் உள்ளூர் அதிகாரசபையினால் கொண்டுநடாத்தப்படும் நீர்வழங்கல் அல்லது சாக்கடைச் சேவைப் பொறுப்புமுயற்சியினைச் சபைக்கு வலுக் கட்டாயமாக மாற்றுவதற்காக, இச்சட்டத்தின்கண் இனிமேல், " வலுக்கட்டாய மாற்றத்திட்டம் " எனக் குறிப்பீடுசெய்யப்படும் மாற்றத்திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டும். வலுக்கட்டாய மாற்றத்திட்டம்.

60. (1) ஓர் உள்ளூரதிகாரசபையினால் கொண்டுநடாத்தப்படும் நீர்வழங்கல், சாக்கடைச் சேவைப் பொறுப்புமுயற்சி தொடர்பில்— வலுக்கட்டாய மாற்றத்திட்டத்தினைத் தயாரித்தற்கான பணிப்பு.

(அ) அத்தகைய அதிகாரசபை அத்தகைய பொறுப்பு முயற்சியைக் கொண்டுநடாத்துவதில் அலட்சியமாயிருத்தல், தவறிழைத்தல், தகுதியின்மை அல்லது பிழையான முகாமை என்ற குற்றத்தைப் புரிந்துள்ளதென, அல்லது

(ஆ) அளிக்கப்பட்ட நீர்வழங்கற் சேவைகளுக்காகச் சபைக்குக் கட்டணங்களைக் கொடுப்பதற்கு அத்தகைய அதிகாரசபை தவணை தவறிவிட்டதென,

அமைச்சரானவர், உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஆலோசனையுடன் தாம் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின்பின்னர் திருப்திப்படின், அத்தகைய பொறுப்புமுயற்சியினைச் சபைக்கு மாற்றுவதற்கான வலுக்கட்டாய மாற்றத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்குச் சபைக்கு எழுத்திலான பணிப்பொன்றை உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் விடுக்கலாம் ; மேற்குறித்த விசாரணையின்போது அவ் உள்ளூரதிகாரசபையும், சபையும் கேட்கப்பட அவற்றுக்குச் சந்தர்ப்பமளிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓர் உள்ளூரதிகாரசபையினால் கொண்டுநடாத்தப்படும் நீர் வழங்கல், சாக்கடைச் சேவைப் பொறுப்புமுயற்சி தொடர்பில், தேசிய அக்கறை கருதி அத்தகைய பொறுப்பு முயற்சி சபைக்குரித்தாக்கப்படுதல் அவசியமானதென அமைச்சரினால் கருதப்பட்டவிடத்து, அமைச்சர், உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அப்பொறுப்பு முயற்சியினைச் சபைக்கு மாற்றுவதற்கான வலுக் கட்டாய மாற்றத்திட்டமொன்றைத் தயாரிக்குமாறு எழுத்திலான பணிப்பைச் சபைக்கு விடுக்கலாம்.

61. (1) உள்ளூரதிகாரசபையொன்றினால் கொண்டுநடாத்தப்பட்ட நீர்வழங்கல் அல்லது சாக்கடைச் சேவைப் பொறுப்புமுயற்சி தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட ஒரு மாற்றத்திட்டம், அத்தகைய பொறுப்புமுயற்சியினைச் சபைக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதோடு, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய,— மாற்றத்திட்டத்தின் உள்ளடக்கம்.

(அ) அத்தகைய பொறுப்புமுயற்சியின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அத்தகைய அதிகாரசபையின் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைச் சபைக்கு மாற்றுவதற்கும், உரித்தாக்குவதற்கும் ;

(ஆ) அத்தகைய பொறுப்புமுயற்சி தொடர்பிலான அல்லது அதோடு சம்பந்தப்பட்ட அத்தகைய அதிகாரசபையின் எல்லா அல்லது எவையேனும் உரிமைகளையும், கடப்பாடுகளையும், பொறுப்புக்களையும் சபைக்கு மாற்றுவதற்கும், அத்தகைய உரிமைகளையும், கடப்பாடுகளையும், பொறுப்புக்களையும் அத்தகைய அதிகாரசபையிடமிருந்து சபைக்கு அவ்வாறு மாற்றுவதற்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக ஒப்பந்தங்களை அல்லது வேறு சாதனங்களை இயைபாக்குவதற்கும் அல்லது திரிபுபடுத்துவதற்கும் ;

(இ) அத்தகைய அதிகாரசபைக்குப் பதிலாக அத்தகைய பொறுப்பு முயற்சியினைக் கொண்டு நடாத்துதலைச் சபைக்கு இயலச் செய்யும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அளவுக்கு எழுத்திலான ஏதேனும் சட்டத்தை இயைபாக்குவதற்கும் அல்லது திரிபுபடுத்துவதற்கும் ;

(ஈ) அத்தகைய ஏதேனும் மாற்றத்தின் விளைவாக அத்தகைய அதிகாரசபைக்கும் சபைக்கும் இடையே அவசியமாகக் கூடிய அத்தகைய நிதிச் சமன்பாடுகளைச் செய்வதற்கும் ;

(உ) சட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடாத்தல் உட்பட, மேற்சொல்லப்பட்ட கருமங்களுக்குக் குறைநிரப்பான அல்லது அக்கருமங்களின் விளைவான வேறேதும் கருமத்திற்கும்,

ஏற்பாடும் செய்யலாம்.

(2) தன்னிச்சையான மாற்றற்றிட்டமொன்று, அது சபையினாலும் அத்தகைய அதிகாரசபையினாலும் தயாரிக்கப்பட்டிருக்கின்றதென்பதற்கு அத்தாட்சியாகச் சபையினதும், உள்ளூரதிகார சபையினதும் இலச்சினைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) வலுக்கட்டாய மாற்றற்றிட்டமொன்று, அது சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கு அத்தாட்சியாகச் சபையின் இலச்சினையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஓராமுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழான நிதிச் சமன்பாடுகளின் நோக்கத்திற்காக, எடுத்துக்கொள்ளப்பட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களின் பெறுமதியானது, உள்ளூரதிகாரசபையின் நிதிகளைக்கொண்டு கட்டப்பட்ட வேலையின் அல்லது வேலைகளின் அப்பாகத்தினது தேய்மானம் கழித்த பெறுமதியாதல் வேண்டும் ; ஆனால் மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகள் அல்லது உதவுதொகைகள்கொண்டு நிறைவேற்றப்பட்ட அத்தகைய வேலைகளை அல்லது வேலைகளின் பாகத்தை உள்ளடக்குதலாகாது.

மாற்றற்றிட்டமொன்றைத் தயாரிக்கும் நோக்கங்களுக்காகச் சபைக்குள்ள தத்துவங்கள்.

62. (1) உள்ளூரதிகாரசபையொன்றினால் கொண்டு நடாத்தப்படும் நீர்வழங்கல் அல்லது சாக்கடைச் சேவைப் பொறுப்பு முயற்சி தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் மாற்றற்றிட்டமொன்றைத் தயாரிக்கும் நோக்கங்களுக்காக, சபையானது,—

(அ) சபை அவசியமெனக் கருதக்கூடிய அத்தகைய விசாரணைகளை நடாத்தலாம் ; அத்துடன் உள்ளூரதிகார சபையின் அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பார்வையிடலாம் ; அத்துடன்

(ஆ) அத்தகைய பொறுப்புமுயற்சி தொடர்பிலும் அத்தகைய திட்டத்தில் ஏற்பாடு செய்யப்படவேண்டிய வேறுகருமங்கள் தொடர்பிலும் சபையானது அவசியமானவை எனக் கருதக்கூடியவாறான அத்தகைய விபரங்களையும் வேறு தகவலையும் சபைக்குக் கொடுக்கும்படியும், அத்தகைய விபரங்கள் அல்லது தகவல் அடங்கிய புத்தகங்களை அல்லது ஆவணங்களைப் பரிசோதிப்பதற்கெனச் சமர்ப்பிக்கும்படியும் அத்தகைய உள்ளூரதிகாரசபையை அல்லது அத்தகைய உள்ளூரதிகாரசபையின் யாரேனுமலுவலரை வேண்டலாம்.

(2) விடயத்துக்கேற்றுற்போல, அத்தகைய உள்ளூரதிகாரசபைக்கு அல்லது அத்தகைய அலுவலருக்கு ஒராமுட்பிரிவின்கீழ் சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் வேண்டுகோளுக்கமைந்தொழுகுதல் ஓர் உள்ளூராதிகாரசபையின் அல்லது அத்தகைய உள்ளூரதிகாரசபையின் யாரேனுமலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(3) ஒராமுட்பிரிவின்கீழ் உள்ளூரதிகாரசபையின் யாரேனுமலுவலருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுக நியாயமான காரணமின்றித் தவறும் உள்ளூரதிகாரசபை அலுவலரெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் ஓராண்டுக்குமிகாத ஒரு காலத்திற்கு இருவகை மறியலுள் ஒன்றிற்கு அல்லது ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியல் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

திட்டத்தினை அமைச்சரின் அங்கீகாரத்திற்கெனச் சமர்ப்பித்தல்.

63. (1) இச்சட்டத்தின்கீழ் தன்னிச்சையான மாற்றற்றிட்டமொன்று சபையினாலும் ஏதேனும் உள்ளூரதிகாரசபையினாலும் தயாரித்து முடிக்கப்பட்டதும் சபையானது, அமைச்சரின் அங்கீகாரத்திற்கென அத்தகைய திட்டத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டதன்மேல் அமைச்சரானவர், உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அத்தகைய திட்டத்தைத் திரிபு இன்றி அங்கீகரித்தல் வேண்டும் அல்லது அவர் அவசியமானவை எனக் கருதக்கூடியவாறான அத்தகைய எவையேனும் திரிபுகளுடன் அங்கீகரித்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஒரு வலுக்கட்டாய மாற்றற்றிட்டம் தயாரித்து முடிக்கப்பட்டதன்மேல், சபையானது அமைச்சரின் அங்கீகாரத்திற்கென அத்திட்டத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டதன்மேல், அமைச்சரானவர் உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அத்தகைய திட்டத்தைத் திரிபின்றி அங்கீகரித்தல் வேண்டும் அல்லது அவர் அவசியமானவை எனக் கருதக்கூடிய வாறான அத்தகைய எவையேனும் திரிபுகளுடன் அங்கீகரித்தல் வேண்டும்.

(3) ஓராமுட்பிரிவின்கீழான அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் மாற்றற்றிட்டந்தொடர்பில் அதனை அங்கீகரிப்பதற்கு அவர்க்குள்ள தத்துவத்தைப் பிரயோகிக்கையில் அமைச்சரானவர், 61 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட கருமங்கள் தொடர்பில் போதிய அளவான ஏற்பாட்டினை அம்மாற்றற்றிட்டம் கொண்டிருக்கிறதென்பதை நிச்சயப்படுத்துவதன் அவசியத்தைக் குறிப்பாகக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

மாற்றற்றிட்டத்திற்குப் பயன் கொடுப்பதற்கான கட்டளைகள்.

64. (1) இச்சட்டத்தின்கீழ் தன்னிச்சையான மாற்றற்றிட்டமொன்று அமைச்சராலங்கீகரிக்கப்பட்டவிடத்து, அமைச்சரானவர் அத்தகைய திட்டத்தின் ஏற்பாடுகளையும், அத்தகைய திட்டத்திற்கு முழு வலுவும் பயனும் கொடுப்பதற்கு அவசியமானவை என அமைச்சரானவர் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு ஏற்பாடுகளையும் கொண்டிருக்க வேண்டிய கட்டளையொன்றைத் தயாரித்து கசற்றில் வெளியிடுதல் வேண்டும். அக்கட்டளை இச்சட்டத்தில் " தன்னிச்சையான மாற்றற் கட்டளை " எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(2) இச்சட்டத்தின்கீழ் வலுக்கட்டாய மாற்றற்றிட்டமொன்று அமைச்சராலங்கீகரிக்கப்பட்டவிடத்து, அமைச்சரானவர் அக்கட்டளையில் அத்தகைய திட்டத்தின் ஏற்பாடுகளையும், அத்தகைய திட்டத்திற்கு முழுவலுவும் பயனும் கொடுப்பதற்கு அவசியமானவை என அமைச்சரானவர் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு ஏற்பாடுகளையும் கொண்டிருக்க வேண்டிய கட்டளையொன்றைத் தயாரித்து கசற்றில் வெளியிடுதல் வேண்டும். அக்கட்டளை இச்சட்டத்தில் " வலுக்கட்டாய மாற்றற் கட்டளை " எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(3) தன்னிச்சையான மாற்றற் கட்டளையொன்று, அமைச்சர் அவசியம் எனக் கருதக்கூடிய அத்தகைய முறையாகவும் அளவிலும், கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் உள்ளூராட்சி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் காலத்திற்குக் காலம் திருத்தப்படலாம்.

(4) வலுக்கட்டாய மாற்றற் கட்டளையொன்று, கசற்றில் வெளியிடப்படுங் கட்டளைமூலம் உள்ளூராட்சி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் காலத்திற்குக் காலம் திருத்தப்படலாம்.

(5) இப்பிரிவின்கீழ் அமைச்சராலாக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும், கசற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று, அல்லது அதன்கண் குறிப்பிடப்படக்கூடியவாறுன அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் அமைச்சராலாக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும், அது கசற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் எவ்வளவு விரைவாக வசதியோ அவ்வளவு விரைவாக, அங்கீகாரத்திற்கெனத் தேசிய அரசுப் பேரவை முன்னர் கொணரப்படுதல் வேண்டும் ; அவ்வாறு அங்கீகரிக்கப்படாத கட்டளை எதுவும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனல் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) அத்தகைய ஒவ்வொரு கட்டளையும் இதனகத்திதன் முன்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுக நடைமுறைக்கு வந்ததும், இதன்கண் சட்டமாக்கப்பட்டாற்போன்று வலுவும் பயனும் உடையதாதல் வேண்டும்.

65. வலுவுடையதாக வந்துள்ள ஏதேனும் தன்னிச்சையான மாற்றற் கட்டளையின் அல்லது ஏதேனும் வலுக்கட்டாய மாற்றற்கட்டளையின் ஏற்பாட்டின் பொருள் கோடல் தொடர்பிலான அல்லது இவற்றோடு சம்பந்தப்பட்ட ஏதேனும் கருமம் அல்லது பிரச்சினையின் மேல் சபைக்கும் ஏதேனும் உள்ளூரதிகாரசபைக்கும் இடையேஎழும் ஏதேனும் பிணக்கு ஒரு முடிவுக்கெனச் சபையினல் அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஆற்றுப்படுத்துகையில் அவரது முடிவு முற்றுனதும் முடிவானதுமாதலும் வேண்டும்; அத்துடன் நீதிமன்றம் அல்லது நியாயசபை எதிலும் அது கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

குறித்த சில பிணக்குகளை அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தல்.

66. (1) வலுவுடையதாக வந்துள்ள ஏதேனும் தன்னிச்சையான மாற்றற் கட்டளைக்கு அல்லது வலுக்கட்டாய மாற்றற் கட்டளைக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக, சபைத் தவிசாளரினல் அதன் சார்பாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனும் சபையின் அலுவலர் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய கட்டளையினல் சபைக்கு மாற்றப்பட்டு உரித்தாக்கப்பட்ட ஆதனம் எதனையும் உடைமையில் எடுக்கலாம்.

சபைக்காகவும் அதன் சார்பிலும் ஆதனத்தை உடைமையில் எடுத்தற்கான நடவடிக்கை முறை.

(2) ஓராமுட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலர், எழுத்திலான அறிவித்தல்மூலம்—

(அ) அவ்வறிவித்தலிற் குறிப்பிடப்படவேண்டிய அத்தகைய தேதியன்றும் அத்தகைய நேரத்திலும் இடத்திலும் அத்தகைய அலுவலர் அத்தகைய ஆதனத்தைச் சபைக்காகவும் அதன் சார்பிலும் உடைமையாகவெடுக்கக் கருதுவதாக அந்த உள்ளூரதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அவ்வாறு குறிப்பிடப்படும் தேதியன்றும் நேரத்திலும் இடத்திலும் உள்ளூரதிகாரசபையின் அதிகாரமளிக்கப் பட்ட முகவரொருவரைச் சமுகமாயிருக்கும்படியும் அத் தகைய ஆதனத்தை அத்தகைய அலுவலர் உடைமை யாயெடுப்பதற்கு உதவும்படியும் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(3) ஒராமுட்பிரிவின்கீழ் சபையின் ஒரலுவலரினால் ஏதேனும் ஆதனம் உடைமையிலெடுக்கப்பட்டதன் பின்னர், அத்தகைய அலு வலர் அத்தகைய ஆதனத்தைத் தாம் உடைமையிலெடுத்திருப்ப தாகக் கூறும் சான்றிதழொன்றை உள்ளூரதிகாரசபைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(4) இரண்டாமுட்பிரிவின்கீழ், கொடுக்கும்படி தேவைப்படுத்தப் பட்டிருக்கும் அறிவித்தல், உள்ளூரதிகாரசபைக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட்டதாயின், அது கொடுக்கப்பட்டதாகக் கருதப் படுதல் வேண்டும்.

(5) இரண்டாமுட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தலொன்றி லுள்ள ஏதேனும் பணிப்பிற்கு நியாயமான காரணமின்றி இணங்கி யொழுகத் தவறும் ஆள் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னிலையி லான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் ஓராண்டுக்குமிகாதவொரு காலத்திற்கு இருவகை மறியலிலொன் றுக்கு அல்லது ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத் திற்கு அல்லது அத்தகைய மறியல், குற்றப்பணம் ஆகிய இரண் டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

சபைக்காகவும் அதன் சார்பிலும் ஆதனத்தை உடைமையிலெடுத் தலைத் தடைசெய் தல் அல்லது அதற்கு முட்டுக் கட்டை போடுதல்.

67. (1) அறுபத்தாறும் பிரிவின்கீழ் சபைக்காகவும் அதன் சார்பிலும் ஏதேனும் ஆதனத்தைச் சபையின் அலுவலர் எவரும் உடைமையிலெடுப்பதிலிருந்து அவரைத் தடைசெய்யும் அல்லது அவ ருக்கு முட்டுக்கட்டைபோடும் ஒவ்வோராளும், தவறொன்றுக்குக் குற் றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னிலை யிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும், ஓராண்டுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கு இருவகை மறியலிலொன் றுக்கு அல்லது ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத் திற்கு அல்லது அத்தகைய மறியல், குற்றப்பணம் ஆகிய இரண் டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் ஆதனத்தைச் சபைக்காகவும் அதன் சார்பிலும் உடைமையில் எடுப்பதற்கு 66 ஆம் பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப் பட்ட யாரேனும் சபையின் அலுவலர், ஏற்பட்டிருக்கும் அல்லது ஏற் படக்கூடிய ஏதேனும் முட்டுக்கட்டை அல்லது எதிர்ப்புக் காரணமாக அத்தகைய ஆதனத்தை உடைமையில் எடுக்கமுடியாதவராயிருக்கு மிடத்து, அல்லது தாம் உடைமையிலெடுக்கமுடியாதென அஞ்சு மிடத்து அவர், அவ்வாதனம் வைக்கப்பட்டுள்ள அல்லது அமைந் துள்ள இடத்தின்மேல் நியாயாதிக்கம்கொண்ட நீதிவான் நீதி மன்றத்திற்கு அதற்கென விண்ணப்பமொன்றைச் செய்ததன்

மேல், சபைக்காகவும் சபையின் சார்பிலும் அவருக்கு அவ்வா தனத்தின் உடைமையை ஒப்படைக்கும்படி 'பிசுக்காலைப் பணிக்கும் நீதிமன்றக் கட்டளையொன்றைப் பெற உரித்துடையவராவார்.

(3) நீதிவான் நீதிமன்றமொன்றினால் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று பிசுக்காலுக்கு விடுக்கப்பட்டவிடத்து, அவர், உடனடியாக அக்கட்டளையை நிறைவேற்றுதல் வேண்டுமென்பதோடு, அக்கட்டளை நிறைவேற்றப்பட்ட முறைபற்றி நீதிமன்றத்திற்கு எழுத்தில் அறிக்கை செய்தலும் வேண்டும்.

(4) இரண்டாமுட்பிரிவின்கீழ் நீதிவான் நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட கட்டளையொன்றை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, பிசுக்கால் அல்லது அவரது பணிப்பின்கீழ் செயற்படும் யாரேனுமாள் அக்கட்டளையிற் காட்டப்பட்டுள்ள ஏதேனும் அசைவுள்ள ஆதனம் வைக்கப்பட்டுள்ள இடத்துட் செல்வதற்கும், அத்தகைய அசைவுள்ள ஆதனத்தைக் கைப்பற்றுவதற்கும் அல்லது அக்கட்டளையிற் காட்டப்பட்டுள்ள ஏதேனும் காணி, கட்டிடம் அல்லது வேறு கட்டமைப்புட் செல்வதற்கும், அதன்கணிருக்கும் எவரேனும் ஆளை வெளியேற்றுவதற்கும், சபைக்காகவும் அதன் சார்பிலும் அதனை உடைமையிலெடுக்க அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின், காணியின், கட்டிடத்தின் அல்லது வேறு கட்டமைப்பின் உடைமையை ஒப்படைப்பதற்கும் அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய வலோத்காரத்தைப் பயன்படுத்தலாம்.

## பாகம் IV
## சபையின் பணியாட்டொகுதி

*சபையின் பொது முகாமையாளரும் அவரது தத்துவங்களும் கடமைகளும் அவற்றைக் கையளித்தலும்.*

68. (1) சபை, அமைச்சரின் அங்கீகாரத்துடன், தகுதியும் அனுபவமும் வாய்ந்த ஆளொருவரைச் சபையின் பொது முகாமையாளராக நியமித்தல் வேண்டும்.

(2) பொது முகாமையாளர், கொள்கைபற்றிய விடயங்களின்மீது சபையின் பொதுப்பணிப்புக்கமைய, சபையின் தொழிலை நெறிப்படுத்துவதற்கும், சபையின் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பனவற்றை ஒழுங்கமைத்து நிறைவேற்றுவதற்கும், சபை ஊழியர்களினது நிருவாகக் கட்டுப்பாட்டிற்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) பொது முகாமையாளர், சபையின் அங்கீகாரத்துடன் காலத்துக்குக்காலம் அவர் அவசியமானவையெனக் கருதக்கூடியவாறான அவரது தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகள் என்பனவற்றுள் அத்தகையனவற்றைச் சபையின் வேறெவரேனும் ஊழியருக்குக் கையளிக்கலாம் என்பதுடன், அத்தகைய எவையேனும் தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகள் அவ்வாறு கையளிக்கப்பட்டுள்ள எவரேனும் ஊழியர், பொது முகாமையாளரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைய அவற்றை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(4) பொது முகாமையாளரை, போதிய நல்ல காரணத்திற்காகவன்றியும் அமைச்சரின் முன்னங்கீகாரமின்றியும் பதவியிலிருந்து அகற்றுதலாகாது.

சபையின் பணியாட்டொகுதிக்கான நியமனங்கள்.

69. அறுபத்தெட்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அவசியமானவர்களெனச் சபை கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களேயும் சேவையாளர்களேயும் அதன் பணியாட்டொகுதிக்குச் சபை நியமிக்கலாம் என்பதோடு, அவர்களது ஊதிய நியதிகளேயும் வேறு தொழில் நிபந்தனைகளேயும் தீர்மானிக்கலாம்.

திணைக்களத்தின் அரச அலுவலர்கள் இளைப்பாறுதலும் அவர்கள் சபையினல் தொழிலுக்கமர்த்தப்படுதலும்.

70. (இதனகத்திதன்மேல் இப்பாகத்தில் " மாற்றற்றேதி " எனக் குறிப்பீடு செய்யப்படும்) எதேனும் தேதியில் 57 ஆம் பிரிவின் கீழ் நீர்வழங்கல், வடிகால் சேவைத் திணைக்களம் சபைக்கு மாற்றப்பட்டதன் மேல், அரசாங்கத்தின் இடமாற்றத்துக்குரிய சேவையிலுள்ள அலுவலர்கள் தொடர்பிற்றவிர, பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(1) ஓய்வூதியத்துக்குரிய திணைக்களத்தின் அரச அலுவலர் ஒவ்வொருவரும் சேவையிலிருந்து ஓய்வு பெறற்கு அல்லது சபையின் கீழ் தொழிலுக்கமர்த்தப்படுவதற்கு விருப்புத் தெரிவிக்கவிடப்படல் வேண்டும்.

(2) அத்தகைய எவரேனும் அலுவலர் ஓய்வு பெறற்கு விருப்புத் தெரிவிக்குமிடத்து, மாற்றற்றேதியன்று அவர் வகித்த பதவி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், மாற்றத்தேதியன்று அப்பதவி இல்லாதொழிக்கப்பட்டது என்ற எதுவின் மீது ஓய்வூதியக் குறிப்புகளின் கீழ் வழங்கல் ஒன்று பெறுவதற்கு உரித்துடையவருமாவர்.

(3) அத்தகைய எவரேனும் அலுவலர் சபையின் கீழ் தொழிலுக்கமர்த்தப்பட விருப்புத் தெரிவிக்குமிடத்து, அத்தகைய அலுவலராலும் சபையாலும் இணங்கிக் கொள்ளப்படும் அத்தகைய நியதி, நிபந்தனைகளின்மீது சபை அத்தகைய அலுவலரை தொழிலுக்கமர்த்துதல் வேண்டுமென்பதுடன்—

(அ) மாற்றற் தேதியன்று அத்தகைய அலுவலர் பத்தாண்டுகட்குக் குறையாத ஓய்வூதியத்துக்குரிய சேவையை அல்லது எட்டாண்டுக்குக் குறைந்த ஓய்வூதியத்துக்குரிய சேவையை உடையவராயிருப்பின், 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார்ப் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் பந்திகள் (அ), (ஆ) என்பனவற்றின் ஏற்பாடுகள் எற்ற மாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய அலுவலர் பத்தாண்டுகட்குக் குறைந்ததும் எட்டாண்டுகட்குக் குறையாததுமான ஓய்வூதியத்துக்குரிய சேவையை உடைவராயிருப்பின்,

(i) அத்தகைய அலுவலர் அரசாங்கத்துக்கு ஆற்றியுள்ள சேவைக் காலத்தோடு எவ்வளவு காலத்துக்குச் சபையின் கீழ் பணியாற்றிஞல் (இக் காலம் இதனகத்திதன் மேல் " இயைபான

காலம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) அவரது மொத்தச் சேவைக்காலம் பத்தாண்டுக் காலம் ஆகுமோ, அவ்வளவு காலத்துக்கு அவ்வலுவலரினால் சபையின் கீழ் ஆற்றப்படும் சேவை, அத்தகைய அலுவலர் அரசாங்கத்தின் கீழ் ஆற்றிய ஓய்வூதியத்துக்குரிய சேவையாகக் கணக்கிடப்படல் வேண்டும் ;

(ii) இயைபான காலத்தின்போது, சபையானது மாற்றத் தேதியன்று திணைக்களத்தில் அத்தகைய அலுவலரால் வகிக்கப்பட்ட பதவிக்கென அவருக்குச் செலுத்தப்படற்குரிய வேதனத்தின் நூற்றுக்கிருபத்தைந்து வீதத்தை திரட்டு நிதியத்தில் வரவு வைப்பதற்கென திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு சபையின் நிதிகளிலிருந்து மாதந்தோறும் செலுத்துதல் வேண்டும் ;

(iii) இயைபான காலத்தின்போது அத்தகைய அலுவலர் மாற்றத் தேதியன்று திணைக்களத்தில் அவர் வகித்த பதவியில், எவையேனும் சம்பள உயர்வுகள் இருப்பின், அவற்றைப் பெற்றுள்ளாரெனக் கருதப்படல் வேண்டும் ; ஆயினும் சபையின் கீழான அவரது சேவை திருப்தியானதாயிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(iv) இயைபான காலத்தின் இறுதியில் 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார்ப் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பகிரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவைச் சகாய நிதியத்துக்கு உதவு தொகை செலுத்துபவராகவுள்ள திணைக்களத்தின் அரச அலுவலர் ஒவ்வொருவரதும் பதவி ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டுமென்பதோடு, அத்தகைய அலுவலர், வேலையில் இருந்து நீக்கப்படுதல் மூலமாகவல்லாது வேறு வகையாக அரசாங்கத்தின் சம்மதத்துடன் ஒப்பந்தத்தை முடிவுறுத்தியதன் மேல் அரசாங்கத்தின் சேவையை விட்டு விலகியவராக, அக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கருதப்படுதலும் வேண்டும்.

(5) எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் முரணானது எது எவ்விதமிருப்பினும், (4) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட எவரேனும் அரச அலுவலர், மாற்றத் தேதியின் பின்னர் சபையினால் தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்து அத்தகைய அலுவலர் பகிரங்க சேவை சகாய நிதியக் கட்டளைச்சட்டத்தின் கீழ்ஏதேனும் பணத்தொகையைப் பெறுவதற்குஉரித்துடையவராய் இருக்குமிடத்து அத்தகைய தொகை அவருக்குக்

கொடுக்கப்படலாகாது. ஆனல் 17 (எ) என்னும் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட சபையின் சகாயநிதியமொன்றுக்கு அவருடைய கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

*உள்ளூரதிகார சபையின் நீர் வழங்கல், சாக்கடைச் சேவைப் பொறுப்பு முயற்சி சபைக்கு மாற்றப்படும் விடயத்தில் ஆளணியினரைத் தொழிலுக்கமர்த்தல்.*

**71.** உள்ளூரதிகாரசபையினல் கொண்டுநடாத்தப்பட்ட நீர்வழங்கல் சேவைகள் அல்லது சாக்கடைச் சேவைகள் பொறுப்பு முயற்சி இச்சட்டத்தின் கீழ் சபைக்கு மாற்றப்பட்டவிடத்து, உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஆலோசனையுடன் அமைச்சரினல் அதற்கென ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் மூலம் விதிக்கப்படக்கூடியவாருன அத்தகைய திரிபுகள், மாற்றங்கள் அல்லது சேர்த்தல்களுக்கமைய, உள்ளூராட்சிச் சேவையுறுப்பினர் உட்பட உள்ளூரதிகாரசபையின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும், அவர்கள் தொடர்பிலும், 70 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*70 ஆம், 71 ஆம் பிரிவுகளிற் குறிப்பீடுசெய்யப்பட்டோர் தவிர்ந்த உள்ளூரதிகார சபைகளின் அரச அலுவலர்களையும் சேவையாளர்களையும் சபையின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல்.*

**72.** (1) சபையின் வேண்டுகோளின் பேரில், 70 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலர் தவிர்ந்த எவரேனும் அரச அலுவலர், அவ்வலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சினது செயலாளரினதும் சம்மதத்துடன், சபையினல் இதையொத்த சம்மதத்துடன் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) எவரேனும் அரச அலுவலர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவிடத்து 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார்ப் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) எவரேனும் அரச அலுவலர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டவிடத்து, 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) சபையின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவை உறுப்பினர் ஒருவராகவிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, 71 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலர் அல்லது சேவையாளர் தவிர்ந்த எதேனும் உள்ளூரதிகாரசபையின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், விடயத்துக்கேற்ப அந்த அலுவலரதும் அல்லது சேவையாளரதும் உள்ளூராட்சிச்சேவை ஆணைக்குழுவினதும் அல்லது உள்ளூரதிகாரசபையினதும் இசைவுடன், அதே இசைவுடன் சபையாற்றீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குச் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அச்சபையினலும் அந்த ஆணைக்குழுவினலும் அல்லது அதிகாரசபையினலும்

உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான, ஓய்வூதிய அல்லது சகாயநிதிய உரிமைகள் தொடர்பிலான நியதி, நிபந்தனைகள் உட்பட, அத்தகைய நியதி, நிபந்தனைகளின்மேல் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) எதேனும் உள்ளூரதிகாரசபையின் யாரேனுமலுவலர் அல்லது சேவையாளர் உள்ளூராட்சிச்சேவை உறுப்பினராக அவர் இருப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி, 4 ஆம் உட்பிரிவின்கீழ் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அப்பணியாட்டொகுதியின் வேறெந்த உறுப்பினரும் அமைந்தொழுக வேண்டிய அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அவரும் அமைந்தவராதல் வேண்டும்.

சபைக்குச் செய்யும் சேவை, அரசாங்கத்துக்குச் சேவை செய்வதற்கான ஒப்பந்தங்களின் நோக்கங்களுக்காக அரசாங்கத்துக்குச் செய்யும் சேவையாகக் கருதப்படுதல்.

73. குறித்தவொரு காலத்திற்கு அரசாங்கத்தில் சேவை செய்வதற்கு உடன்படுபவராகக் கூறும் ஓர் ஒப்பந்தத்தை அரசாங்கத்துடன் செய்துகொண்டுள்ள யாரேனும் ஆளைச் சபை தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து அந்த ஆள் சபைக்காக சேவை செய்யும் எந்தச் சேவைக் காலமும், அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அவர் அரசாங்கத்திற்குச் செய்யும் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

எலவே ஓய்வூதியத்தைப்பெறும் ஆட்களைச் சபை தொழிலுக்கமர்த்தல்.

74. வேறேதேனும் சட்டத்தில் முரணானது எது எவ்விதமிருப்பினும், அரசாங்கத்திடமிருந்து அல்லது உள்ளூரதிகாரசபையிடமிருந்து அல்லது உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவிடமிருந்து எலவே ஓய்வூதியத்தைப் பெறுகின்ற ஆள் எவரும் சபையினால் தொழிலுக்கமர்த்தப்படுகின்றவிடத்து, சபையினால் அவர் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கும் காலத்தின்போது அத்தகைய ஓய்வூதியம் அவருக்குக் கொடுக்கப்படுதலாகாது.

பொருள்கோடல்.

75. இப்பாகத்தின் நோக்கங்களுக்காக—

" ஓய்வூதியமுடைய அரச அலுவலர் " என்பது—

(அ) ஓய்வூதியங்கள் மீதான குறிப்புக்களின் 2 ஆம் பிரிவின் கீழ் ஓய்வூதியத்துக்குரித்துடைய பதவியொன்றென வெளிப்படுத்தப்பட்ட பதவியினை வகிக்கின்ற ; அத்துடன்

(ஆ) அரசாங்கத்தின் இடமாற்றத்துக்குரிய சேவையினைச் சேராத, பகிரங்க அலுவலர் என்று பொருளாகும் ;

" ஓய்வூதியமுடைய சேவை " என்பது ஓய்வூதியங்கள் மீதான குறிப்புக்களின் கீழ் ஓய்வூதியத்துக்கெனக் கணக்கிடப்படக்கூடிய அரசாங்கத்தின் கீழான சேவை என்று பொருளாகும்.

சபையின் பணியாட்டொகுதி உறுப்பினர் அரச அலுவலர்களாகக் கருதப்படுதல்.

76. சபையின் பணியாட்டொகுதி உறுப்பினர் அனைவரும் தண்டனைச் சட்டக்கோவையின் பொருளுக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் அரச அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் V

### நிதியும் கணக்காய்வும்

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளினது ஏற்புடைமை.

**77.** 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 11 ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் சபையின் நிதிக்கட்டுப்பாடு தொடர்பிலும் கணக்குகள் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

நிதியாண்டு.

**78.** சபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

சபையின் மூலதனம்.

**79.** (1) சபையின் தொடக்க மூலதனம், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினாற்றீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மூலதனம்—

(அ) அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட நன்கொடைகளையும் ;

(ஆ) ஒரு திணைக்களத்துக்கு அல்லது கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் கட்டளையின் மூலம் அல்லது அவ்வமைச்சரின் சம்மதத்துடன், அல்லது உள்ளூரதிகாரசபையொன்றன் விடயத்தில் உள்ளூராட்சி என்ற விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் கட்டளையின் மூலம் அல்லது அவரது சம்மதத்துடன், அந்தத் திணைக்களத்தால் அல்லது அந்தப் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தால் அல்லது உள்ளூரதிகாரசபையால் சபைக்கு மாற்றப்படக்கூடிய அத்தகைய எவையேனும் தேறிய இருப்புச்சொத்துக்களின் பெறுமதியையும் ;

(இ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினாற்றீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளின்மேல் அரசாங்கத்தினாற் கொடுக்கப்பட்ட அல்லது கிடைக்கக்கூடியனவாக்கப்பட்ட கடன்களையும்,

கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) சபையின் தொடக்க மூலதனம், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினாற்றீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் சபைக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கிடைக்கக்கூடியதாக்கப்படுதல் வேண்டும்.

(3) சபையின் மூலதனமானது, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு சபைக்குக் மாற்றப்பட்டனவான தேறிய இருப்புச் சொத்துக்களின் பெறுமதியினாலும், ஏதேனும் ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அல்லது தேசிய அரசுப் பேரவையின் ஏதேனும் தீர்மானத்தினால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகைகளினாலும் காலத்துக்குக்காலம் அதிகரிக்கப்படலாம் என்பதுடன், அத்தகைய தொகைகள், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினாற்றீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளின்மேல், நன்கொடை வகையாக அல்லது கடன் வகை

யாக, காசாக அல்லது பொருளாக, அரசாங்கத்திஞற சபைக்குக் கொடுக்கப்படுதலும் அல்லது கிடைக்கக்கூடியனவாக்கப்படுதலும் வேண்டும்.

80. (1) சபையானது அதன் நோக்கங்களுக்காகப் பங்குத் தொகுதி எதனையும் ஆக்கி வழங்கலாமென்பதோடு, அவ்வாறு ஆக்கப்பட்டு வழங்கப்படும் பங்குத்தொகுதி இச்சட்டத்தின்கண் இனிமேல் " இலங்கை நீர்வழங்கல், சாக்கடைச் சேவைப் பங்குத் தொகுதி " எனக் குறிப்பீடு செய்யவும்படும். இலங்கை நீர் வழங்கல், சாக்கடைச் சேவைப் பங்குத்தொகுதி.

(2) இலங்கை நீர்வழங்கல், சாக்கடைச் சேவைப் பங்குத் தொகுதி யானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச் சரின் ஒருப்பாட்டோடு அமைச்சராற் கொடுக்கப்பட்ட அங்கீகாரத் துடன், சபையிஞற்றீர்மானிக்கப்படக்கூடியவாருன அத்தகைய நியதிகளுக்கேற்ப வழங்கப்படுதல், மாற்றப்படுதல், கையாளப்படு தல், மீட்கப்படுதல், அத்துடன் நீக்கப்படுதல் வேண்டும்.

81. (1) அமைச்சரின் ஒருப்பாட்டுடன், நிதி என்னும் விடயத் துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரானவர், 80 ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு வழங்கப்பட்ட ஏதேனும் இலங்கை நீர்வழங்கல், சாக்கடைச் சேவைப் பங்குத் தொகுதியினை அல்லது இலங்கைக்குள் உள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் நிறுவ னம் அல்லது தாபனத்திடமிருந்து பெறப்பட்ட வேறு ஏதேனும் கடனை மீளக்கொடுப்பதற்கும், அவற்றின் மீதான வட்டியைக் கொடுப்பதற்கும் உத்தரவாதமளிக்கலாம். அரசாங்க உத்தரவாதம்.

(2) ஓராமுட்பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ஓர் உத்தர வாதத்தை நிறைவு செய்வதற்குத் தேவைப்படும் ஏதேனும் பணத் தொகையானது, தேசிய அரசுப் பேரவையின் முன்னங்கீ காரத்துடன் திரட்டு நிதியத்திலிருந்து கொடுக்கப்படலாம்.

(3) ஓராமுட்பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ஓர் உத்தர வாதத்தை நிறைவு செய்வதற்கென திரட்டு நிதியத்திலிருந்து கொடுக்கப்பட்ட ஏதேனும்பணத்தொகையானது, அமைச்சரின் ஒருப் பாட்டுடன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச் சர் தீர்மானிக்கக்கூடியவாருன அத்தகைய வீதத்தில் அதற் கான வட்டியுடன், அத்தகைய ஒருப்பாட்டுடன் நீதியமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாருன அத்தகைய வீதமாகவும் அத்தகைய காலத்துள்ளும் சபையிஞல் மீளக்கொடுக்கப்படுதல் வேண்டும்.

82. (1) எண்பத்தியோராம் பிரிவின் கீழான உத்தரவாத மொன்றைக் கொடுத்ததன் பின்னர் உடனடியாக, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரானவர் அவ்வுத்தர வாதம் பற்றிய கூற்றென்றைத் தேசிய அரசுப் பேரவை முன்னர் வைத்தல் வேண்டும் அல்லது வைப்பித்தல் வேண்டும். உத்தரவாதம் பற்றி நிதி அமைச்சர் தேசிய அரசுப் பேரவைக்கு அறிவிக்க வேண்டுமென்பது.

(2) எண்பத்தியோராம் பிரிவின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதே னும் உத்தரவாதத்தை நிறைவு செய்வதற்கென திரட்டு நிதி யத்திலிருந்து அப்பிரிவின்கீழ் ஏதேனும் பணத்தொகை கொடுக்

கப்பட்டவிடத்து, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரானவர் அத்தகைய பணத்தொகையானது கொடுக்கப் பட்டதெனக் கூறும் கூற்றொன்றை உடனடியாகத் தேசிய அரசுப் பேரவை முன்னர் வைத்தல் வேண்டும் அல்லது வைப்பித்தல் வேண்டும்.

ஒதுக்குநிதிகள்.

83. (1) சபையானது—

(அ) சபையின் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தின் காப் புறுதியை மேவுவதற்கும் மூன்றும் திறத்தவரின் அபாய ஈட்டுக்கும் தொழிலாளர் நட்டாட்டுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் எழும் பொறுப்புக்களை இறுப்ப தற்குமான காப்புறுதி நிதியம் ஒன்றையும் ;

(ஆ) வருவாய்ப் பணங்களிலிருந்து மூலதன வேலைகளுக்கு நிதியளிக்கும் நோக்கத்திற்காகவும் சபையின் நிதி நிலை தளம்பாமல் இருத்தலை உறுதிப்படுத்தற்காகவும் சபை யானது காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு நோக்கங்களுக்காகவும் பொது ஒதுக்கு நிதியம் ஒன்றையும் ;

(இ) அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையானது அவசியமான தெனக் கருதக்கூடிய வேறு ஏதேனும் ஒதுக்குநிதியத் தையும்,

தாபித்துப் பேணிவரலாம்.

(2) ஓராமுட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட நிதியங்களுள் ஒவ்வொன்றி லும் அல்லது எவற்றிலும் காலத்துக்குக்காலம் இருக்கவேண் டிய பணத்தொகைகள், சபையினாற்றீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளாதல் வேண்டும்.

## பாகம் VI

## வீதவரிகளும் விதிப்புகளும்

வீதவரிகளையும் விதிப்புகளையும் சபை நிர்ணயித் தல்.

84. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபையின் ஏதேனு மதிகார இடப்பரப்பில் நீர்வழங்கல், சாக்கடைச் சேவைகளுக்காகச் சபையினால் அறவிடப்படவேண்டிய வீதவரிகளும் விதிப்புகளும் அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையினால் காலத்துக்குக்காலம் நிரணயிக்கப்படும் வீதவரிகளுக்கும் விதிப்புகளுக்கும் இணங்கியன வாதல் வேண்டும். அமைச்சர் அத்தகைய அங்கீகாரத்தை அளிக்கு முன்னர் உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சரையும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரையும், அவர் அவசியமானவரெனக் கருதும வேறு எவரேனும் அமைச்சரையும் கலந்தாலோசித்தல் வேண் டும்.

(2) நீர் விநியோக அமைப்புகளிலிருந்து அறுநூறு அடிக்குள் உள்ள நில உடைமையாளர்களினால் (அவர்களுக்கு நீர் வழங்கப் படினுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி) கொடுபடவேண்டிய வீதவரி தொடர்பில் சபையானது ஏதேனும் உள்ளூரதிகாரசபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளல் வேண்டும். அத்த

கைய வீதவரி, நீர் வீதவரி என அறியப்படுதல் வேண்டுமென்ப தோடு, உள்ளூரதிகாரசபையினால் சபைக்குக் கொடுபடற்குரியதாத லும் வேண்டும்.

(3) சாக்கடைச் சேவைத் தொகுதியோடு தொடுக்கப்பட்ட அல்லது அத்தகைய தொகுதியிலிருந்து முந்நூறு அடிக்குள் இருக்கும் நில உடைமையாளர்களினால் கொடுபடவேண்டிய வீதவரி தொடர்பில் சபையானது ஏதேனும் உள்ளூரதிகாரசபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளல் வேண்டும். அத்தகைய வீதவரி, சாக்கடைச் சேவை வீதவரி என அறியப்படுதல் வேண்டுமென்பதோடு, உள்ளூரதிகாரசபையினால் சபைக்குக் கொடுபடற்குரியதாதலும் வேண்டும்.

(4) இரண்டாமுட்பிரிவின் கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் கொடுபடவேண்டிய ஏதேனும் வீதவரித் தொகை தொடர்பில் சபைக்கும் ஏதேனும் உள்ளூரதிகாரசபைக்கும் இடையே உடன்பாடின்மை ஏற்படும் சந்தருப்பத்தில், அந்தக் கருமம் அமைச்சரினாற்றீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) சபையானது, யாரேனும் ஆளுடனான அல்லது ஏதேனும் குழுவுடனான உடன்படிக்கை மூலம் சிறப்பு விலைகளை அறவிடுவதற்கு இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ளது எதுவும், சபையைத் தடுப்பதாகாது.

(6) ஏதேனும் வளவுக்கு மானி மூலமே நீர் வழங்கப்படும் எனத் தேவைப்படுத்தச் சபையானது உரித்துடையதாதல் வேண்டுமென்பதோடு, ஓராமுட்பிரிவின் ஏற்பாடுகள் மானி மூலம் நீர் வழங்குவதற்கான விதிப்புகளையும் உள்ளடக்குதலும் வேண்டும்.

(7) ஓராமுட்பிரிவின் கீழ் சபையினால் நிர்ணயிக்கப்படும் வீதவரிகளும் விதிப்புகளும், மாதந்தோறும், அல்லது காலாண்டு தோறும் அல்லது அரையாண்டு தோறும் என்ற அடிப்படையில் கொடுப்பனவுப் பட்டியல் தயாரிக்கப்படுவதைத் தடை செய்யாதிருக்கக்கூடியனவாக நிச்சயிக்கப்படல் வேண்டுமென்பதோடு,—

(அ) கசற்றிலும் அத்தகைய வீதவரிகளுக்கும் விதிப்புகளுக்கும் விளம்பரங் கொடுக்க மிகவும் உகந்ததெனச் சபைக்குத் தோற்றக்கூடியவாறான அத்தகைய வேறு முறையிலும் வெளியிடப்படுதலும் வேண்டும் ;

(ஆ) அவை கசற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அதன்கண் குறிப்பிடப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும் ; அத்துடன்

(இ) சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொருத்திகள் தொடர்பிலான வாடகையையும் வேறு கட்டணங்களையும் உள்ளடக்கலாம்.

85. எண்பத்திநாலாம் பிரிவின் கீழ் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட வீதவரிகளும் விதிப்புகளும், வெவ்வேறு நோக்கங்களுக்கு வழங்கப்படும் நீர் வழங்கற் சேவைகளுக்கு வெவ்வேறு விலைகளை விதிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். வெவ்வேறு விதிப்புகளை நிர்ணயிக்கவுள்ள தத்துவம்.

ஐயுறவான விடயங்களில் விதிப்புகளைச் சபை தீர்மானித்தல

86. ஏதேனும் விடயத்தில் ஏதேனும் வீதவரி அல்லது விதிப்பு ஏற்புடையதா அல்லதா என, அல்லது எந்த வீதவரி அல்லது விதிப்பு அவ்வாறு ஏற்புடையது என ஏதேனும் பிரச்சினை எழுமாயின், அப்பிரச்சினையைச் சபையானது தீர்மானித்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய தீர்மானம் முற்றும் முடிவு மானதாதலும் வேண்டும்; அத்துடன் நீதிமன்றம் அல்லது நியாய சபை எதிலும் அது கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

நீர்வழங்கற்கான விதிப்புகளையும் சாக்கடைச் சேவைக்கான விதிப்புகளையும் அறவிடுதல்.

87. (1) இந்தப் பிரிவில்,—

(அ) "நீர் வழங்கற்கான விதிப்பு" என்னுஞ் சொல்லமைப்பு, உள்ளூரதிகாரசபை உட்பட யாரேனுமாளுக்குச் சபையினால் வழங்கப்பட்ட நீருக்காகச் சபைக்குக் கொடுபட வேண்டிய பணத்தொகை என்று பொருளாகும்;

(ஆ) "சாக்கடைச் சேவைக்கான விதிப்பு" என்னும் சொல்லமைப்பு சாக்கடைச் சேவை தொடுக்கப்பட்ட ஆதனத்தையுடைய யாரேனுமாளினால் சபைக்குக் கொடுபட வேண்டிய பணத்தொகை என்று பொருளாகும்.

(2) (அ) யாரேனுமாளினால் ஏதேனும் மாதந்தொடர்பில் கொடுபடவேண்டிய நீர்வழங்கற்கான விதிப்பு அல்லது சாக்கடைச் சேவைக்கான விதிப்பு, அத்தகைய ஆளினால்,—

(i) சபையிடமிருந்து அத்தகைய விதிப்புத் தொடர்பிலான கோரிக்கையொன்று அத்தகைய ஆளினாற் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் கொடுக்கப்படுதல் வேண்டும், அல்லது

(ii) அத்தகைய ஆள், அத்தகைய கோரிக்கையைப் பெற்றதன் மேல், (3) ஆம் உட்பிரிவின்படி அத்தகைய விதிப்பின் தொகையைப் பற்றிப் பிணக்கிடுமிடத்து, (5) ஆம் உட்பிரிவின்படி அத்தகைய விதிப்புத் தொகை பற்றி இறுதியாகத் தீர்மானிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஆளொருவருக்குச் சபையினால் அனுப்பப்பட்ட நீர்வழங்கற்கான விதிப்பு அல்லது சாக்கடைச் சேவைக்கான விதிப்புத் தொடர்பிலான கோரிக்கை ஒன்று பதிவஞ்சல்மூலம் அனுப்பப்படுதல் வேண்டுமென்பதோடு, அஞ்சல் சாதாரணமாக வழங்கப்படும் தேதியன்று அக்கோரிக்கையானது அத்தகைய ஆளினால் பெறப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) ஏதேனும் காலந்தொடர்பில், நீர்வழங்கற்கான விதிப்புத் தொகையை அல்லது சாக்கடைச் சேவைக்கான விதிப்புத் தொகையைக் கொடுக்கும்படி சபையிடமிருந்து ஆள் ஒருவருக்கு வரும் கோரிக்கை ஒன்றை அத்தகைய ஆள் பெற்றவிடத்து, அத்தகைய ஆள்,அத்தகைய கோரிக்கையினைப் பெற்ற தேதியிலிருந்து இருபத்தொரு நாட்கள் கொண்ட ஒரு காலத்துள், சபைக்கு அதுபற்றி எழுத்திலான கடிதத்தொடர்பு மூலம் அத்தகைய விதிப்புத் தொகை பிழையானது எனப் பிணக்கிடலாம். அத்தகைய கடிதத்தொடர்பு அவ்வாறு பிழையாகக் காணப்படும் தொகையையும் அதற்கான காரணத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழும், அவற்றுக் கமையவுமன்றி, ஆளெவரும், ஏதேனும் காலந்தொடர்பில் அத்தகைய ஆளுக்கு நீர்வழங்கற்கான விதிப்புத்தொகையை அல்லது சாக்கடைச் சேவைக்கான விதிப்புத்தொகையைப் பிழை யென்று கூற உரித்துடையவராகார்.

(5) ஏதேனும் காலந்தொடர்பில் யாரேனுமாளுக்கு நீர்வழங்கற் கான விதிப்புத்தொகை அல்லது சாக்கடைச் சேவைக்கான விதிப்புத்தொகை, அத்தகைய ஆளினால் பிழையென்று கூறப் பட்டவிடத்து, அத்தொகையானது—

(அ) அத்தகைய ஆளுக்கும் சபைக்கும் இடையேயான உடன் படிக்கைமூலம் இறுதியாகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) மூன்றாமுட்பிரிவின்கீழ் அத்தகைய ஆளிடமிருந்து அத்தகைய பிணக்குப் பற்றிய கடிதத்தொடர்பு சபை யினாற் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள் கொண்டவொரு காலத்துள் அத்தகைய உடன்படிக்கை ஏற்படவில்லையாயின், சபையினால் அதன் முழுத் தற்றுணிபின்படி இறுதியாகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, சபையின் தீர்மானம் முற்றானதும் முடிவானதுமாதலும் வேண்டும் ; அத்துடன் அது நீதி மன்றம் அல்லது நியாயசபை எதிலும் கேள்விக்குட் படுத்தப்படுதலுமாகாது.

(6) ஏதேனும் காலந்தொடர்பில் ஆளொருவரினால் கொடு படவேண்டிய நீர்வழங்கற்கான விதிப்பு அல்லது சாக்கடைச் சேவைக்கான விதிப்பு, இரண்டாமுட்பிரிவின்கீழ் அது அவ்வாறு கொடுக்கப்படத் தேவைப்படுத்தப்பட்ட காலத்துள் அத்தகைய ஆளினால் சபைக்குக் கொடுக்கப்படாதவிடத்து, சபையின் பொது முகாமையாளரானவர், அத்தகைய விதிப்புத் தொகையின் கணக்கில் அத்தகைய ஆளிடமிருந்து வரவேண்டிய தொகையை எழுத்தில் சான்றுப்படுத்தல் வேண்டும்.

(7) ஆறாமுட்பிரிவின்கீழ் சபையின் பொதுமுகாமையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை, அத்தகைய சான்றிதழிற் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய பணத்தொகை ஓராயிரத்து ஐந்நூறு ரூபாவிலும் கூடுதலாகவுள்ளது அல்லது கூடுதலாக இல்லை என்பதற்கமைய, அச்சான்றிதழ் எந்த உள்ளூரதிகாரசபையின நிர்வாக எல்லைக்குள் உள்ள இடப்பரப்பு தொடர்பில் வழங்கப்பட் டதோ அந்த உள்ளூரதிகாரசபை அமைந்துள்ள இடப்பரப்பின் முழுமையிலும் அல்லது ஏதேனும் பகுதியில் நியாயாதிக்கங் கொண்ட ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தின் அல்லது நீதிவான நீதிமன்றத்தின் முன்னர் சமர்ப்பித்ததன்மேல், அந்நீதிமன் றமானது, அத்தகைய ஆளின் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் முழுவதையும் அல்லது எதனையும் அல்லது அத்தகைய பணத்தொகையினை அறவிடுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அதன் ஏதேனும் பகுதியைக் கைப்பற்றுவதற்கும், விற்பதற்கும் பிசுக்காலுக்கு அதிகாரம் அளித்து அவரைப் பணிக்கும் நிறைவேற் றெழுத்தாணையொன்றை வழங்குவதற்கும் பணித்தல் வேண்டும்.

அத்துடன் குடியியல் வழக்கு நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
யின் 225 முதல் 297 வரையுள்ள பிரிவுகளின் ஏற்பாடுகள்,
அத்தகைய எழுத்தாணையை நிறைவேற்றல் தொடர்பிலும்,
அத்தகைய கைப்பற்றல், விற்பனை செய்தல் என்பன தொடர்பிலும்,
ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) ஆறுமுட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றித
ழொன்றைச் சபையின் பொது முகாமையாளர் வழங்குகின்ற
விடத்து, அவர், அச்சான்றிதழில் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு
அவ்வாறு குறிப்பிடப்பட்ட பணத்தொகை கொடுபடவேண்டியுள்
ளதென, எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். அத்தகைய
ஆளினால் அத்தகைய அறிவித்தல் பெறப்படவில்லையென்பது
இப்பிரிவின்கீழ் எடுபடவேண்டிய நடவடிக்கைகளைச் செல்லுபடியற்
றனவாக்காது.

(9) ஏழாம், எட்டாம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளிலுள்ளது
எதுவும், அத்தகைய ஆளினால் கொடுபடவேண்டிய நீர்வழங்கற்
கான விதிப்பின் அல்லது சாக்கடைச் சேவைக்கான விதிப்பின்
கணக்கில் ஆள் ஒருவரினால் சபைக்குக் கொடுபடவேண்டிய
ஏதேனும் பணத்தொகையை வேறெவ்வகையிலேனும் சபையானது
அறவிடுவதற்கு அதற்கு உள்ள உரிமையைப் பாதித்தலோ, பாதிப்
பதாகக் கருதப்படுதலோ, பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

அறிவிப்புகளை கொடுத்த தவறும் பாவனையாளர்களுக்கு வழங்கலை நிறுத்தல்.

88. (1) ஏதேனும் காலந்தொடர்பில் ஆளொருவரினால்
கொடுபடவேண்டிய நீர்வழங்கற்கான விதிப்பு அல்லது சாக்கடைச்
சேவைக்கான விதிப்பு, 87 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ்
அவ்வாறு கொடுக்கப்படத் தேவைப்படுத்தப்பட்ட காலத்துள்
சபைக்கு அத்தகைய ஆளினால் கொடுக்கப்படாதவிடத்து, சபை,
பொது முகாமையாளர் அல்லது அதற்கென அவரால்
அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாரேனுமாள், நாற்பத்தெட்டு
மணித்தியாலங்களுக்குக் குறையாத அறிவித்தலொன்றை
அத்தகைய ஆளுக்கு எழுத்தில் கொடுத்ததன் பின்னர், அத்த
கைய ஆளுக்கு வழங்கப்பட்ட நீர் வழங்கற் சேவையினைத் துண்டிக்
கலாம் என்பதோடு, அந்நோக்கத்திற்காக, அத்தகைய சேவை
வழங்கப்படற்கேதுவாயிருக்கும் சபையின் ஆதனங்களாகவுள்ள
எவையேனும் நீர்வழங்கற் சேவை அமைப்புகளையும் வெட்டலாம்
அல்லது துண்டிக்கலாம். அத்துடன் அச்சேவையினைத் துண்டிப்
பதில் சபையினால் உறப்பட்ட எவையேனும் செலவுத் தொகை
களையும் அத்தகைய சேவையை மீளத் தொடுப்பதில் சபையினால்
உறப்படக்கூடிய எவையேனும் செலவுத் தொகைகளையும் அத்
தகைய விதிப்புத்தொகையோடு சேர்த்துக் கட்டும்வரை, அத்தகைய
சேவையை நிறுத்திவைக்கலாம்.

(2) சபையின் பொது முகாமையாளர் அல்லது அதற்கென
அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாரேனுமாள்,—

(அ) நீர்ச்சேவையைத் துண்டிக்கவெனச் சபைக்கு அதிகார
முள்ளவிடத்து, சபைக்குச் சொந்தமான எவையேனும்
நீர் வேலைகளை அகற்றும் அல்லது நிறுத்தும் நோக்கத்
திற்காக ; அல்லது

(ஆ) அத்தகைய சேவைகள் புதுப்பிக்கப்படவேண்டிய விடத்து, சபைக்குச் சொந்தமான எவையேனும் நீர்வேலைகளை மாற்றீடு செய்யும் அல்லது மீளத்தொடுக்கும் நோக்கத் திற்காக,

சபையினால் நீர் அல்லது சாக்கடைச் சேவைகள் வழங்கப்படும் எவ்வளவிற்குள்ளும் நியாயமான எந்நேரத்திலும் புகலாம்.

(3) சபையின் பொது முகாமையாளர் அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாரேனுமாள் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி ஒருவரது வளவிற்குள் புகுதற்கு ஆள் ஒருவர் அனுமதி மறுக்குமிடத்து அல்லது அவ்வாறு செல்வதற்கு வேண்டிய நியாயமான வசதிகளை செய்துதரத் தவறுமிடத்து, அத்தகைய பொது முகாமையாளர் அல்லது அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆள், எழுத்திலான அறிவித்தலொன்றை அத்தகைய ஆளிடம் கொடுத்து இருபத்தி நாலு மணித்தியாலங்கள் கொண்டவொரு காலம் முடிவடைந்த பின்னர், அத்தகைய மறுப்பு அல்லது தவறுகை தொடரும் வரை, விடயத்துக்கேற்றுப்போல, அவ்வாளுக்கான சேவைகளைத் துண்டிக்கலாம் அல்லது அவ்விதம் மாற்றீடு செய்தலை அல்லது மீளத்தொடுத்தலை நிறுத்திவைக்கலாம்.

## பாகம் VII

### பொது

89. எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும், ஓர் உள்ளூரதிகாரசபையினால் கொடுபட வேண்டிய வீத வரிகளும் விதிப்புகளும்— உள்ளூரதிகார சபையினால் கொடுபட வேண்டிய வீதவரிகள், விதிப்புகள் என்பன தொடர்பிலான சிறப்பேற்பாடுகள்.

(அ) அவ்வதிகாரசபையினது நிதியத்திலுள்ள பணங்களில் முதற் பொறுப்பாதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான ஆலோசனையின் பின்னர் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அதிகாரத்தின்கீழ், அத்தகைய அதிகாரத்திற்கு அரசாங்கத்தினால் கொடுபடக்கூடிய ஏதேனும் மானியத்திலிருந்து வழங்கப்படலாம் என்பதோடு, அவ்வாறு கழிக்கப்பட்ட தொகை சபைக்குக் கொடுக்கவும்படலாம்.

90. (1) இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன் கொடுக்கும் அல்லது அவற்றை நிறைவேற்றும் நோக்கங்களுக் காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) குறிப்பாகவும் ஓராமுட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங் களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றியும், அமைச்சரானவர் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பில் அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) விதிக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப் படுத்தப்படும் அல்லது இச்சட்டத்தின்கீழ் அவை தொடர் பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகார மளிக்கப்படும் ஏதேனும் கருமம் ;

(ஆ) குழாயொட்டுவோருக்கு உரிமமளித்தலும் குழாயொட்டு தலையும் குழாயொட்டற் பொருத்திகளையும் கட்டுப்படுத்து தலும் ;

(இ) சபையின் நீர் வேலைகளைப் பாதுகாத்துப் பேணிவரல் ;

(ஈ) சொல்லப்பட்ட நீர் வேலைகளிலிருந்து வழங்கப்பட்ட நீரின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தல் ;

(உ) பகிரங்க அல்லது தனிப்பட்ட பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட நீரை வீணாக்குதலை, தவருகப் பயன்படுத்தலை, தேவைக்கு மேலாக எடுத்தலை அல்லது அசுத்தப்படுத் தலைத் தடுத்தல் ;

(ஊ) சபையின் நீர்வேலைகளின் நோக்கங்களுக்காகப் பயன் படுத்தப்படும் கருவிகளினதும் கொள்கலன்களினதும் அளவும், தன்மையும், வலுவும், அவற்றை ஆக் கும் பொருட்களும், அவற்றை ஒழுங்குபண்ணவேண் டிய முறையும், நிலையும், அவற்றை மாற்றலும், அகற்ற லும், புதுப்பித்தலும், பழுது பார்த்தலும் ;

(எ) நிலக்குழாய்கள் மூலம் வழங்கப்படும் பகிரங்க நீர்வழங்க லைக் கட்டுப்பாடு செய்தலும் அத்தகைய நீரைப் பயன் படுத்தலும் ;

(ஏ) நீர்வழங்கலையும் தனிப்பட்ட சேவைகளினுல் சாக்கடைச் சேவைக்கு ஏற்பாடு செய்தலையும் கட்டுப்பாடு செய்தலும், அந்நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படும் பொருட் களும் பொருத்திகளும் ;

(ஐ) வீட்டுத்தேவை நோக்கங்கள் தவிர்ந்த வேறு நோக்கங் களுக்கு அல்லது தனிப்பட்ட சேவையொன்றின் மூலம் வீடொன்றுக்கு எந்நேரங்களிலும் எந்நிபந்தனைகளுக் கமையவும் நீர்ச் சேவைகள் வழங்கப்படலாமென்பதும், அத்தகைய சேவைகளுக்காகக் கொடுக்கப்படவேண்டிய கட்டணமும் ;

(ஒ) நீர்ச்சேவைகள் தொடர்பில் வருமதியான விதிப்புகளை அற விடுதல் ; அத்துடன்

(ஓ) சாக்கடைச் சேவைத் தொகுதிக்குள் கழிவுகளைக் கொட்டு தலைக் கட்டுப்பாடு செய்தல்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதியொவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறிப்பிடப்படக் கூடியவாருன அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதியொவ்வொன்றும், அது கசற்றில் வெளியிடப்பட்டதன்மேல், எவ்வளவு விரைவாக வசதியோ அவ்வளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனத் தேசிய அரசுப் பேரவை முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அவ்வங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதனையும் செல்லுபடிக்குப் பங்கமின்றி நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

91. இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறும் யாரேனும் ஆள், தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதும் ஓராண்டுக்கு மிகாதவொரு காலத்திற்கு இருவகை மறியலிலொன்றுக்கு அல்லது ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப பணத்திற்கு அல்லது அத்தகைய மறியல், குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். ஒழுங்குவிதிகளை மீறுவதற்கான தண்டனை.

92. (1) சபையின் ஏதேனும் நோக்கத்திற்காக ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப்படவேண்டியிருந்து, அமைச்சரானவர், கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அவ்வுத்தேசக் கொள்ளுகையை அங்கீகரிக்குமிடத்து, அவ்வாதனம் ஒரு பகிரங்க நோக்கத்திற்குத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்கக் காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் கொள்ளப்பட்டு அது சபைக்கு மாற்றவும்படலாம். காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் சபைக்காக அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்.

(2) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் சபைக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப்படுமிடத்து அதற்காகக் கொடுபட வேண்டிய ஏதேனும் தொகை சபையினால் கொடுக்கப்படுதல் வேண்டும்.

93. ஏதேனும் கம்பனி, உள்ளூரதிகாரசபை அல்லது வேறு ஆட்கள் குழு, அதன் பணிகள் தொடர்பிலான ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது சாதனத்தில் இதற்கு முரணானது எது எப்படியிருப்பினும், சபையின் கடமைகளைப் புரிவதற்காகவும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காகவும் அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் சபையுடன் செய்து கொண்டு அவற்றைப் புரியலாம் அல்லது நிறைவேற்றலாம். கம்பனிகள் முதலியன சபையுடன் ஒப்பந்தஞ் செய்வதற்கான தத்துவம்.

94. (1) வழக்கு அல்லது குற்றவழக்கு எதுவும்— இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையினது பணிப்பின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

(அ) இச்சட்டத்தின் கீழ் சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் செயல் எதற்காகவும் சபைக்கு எதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையினது பணிப்பின்மீது யாரேனும் உறுப்பினர், அலுவலர், சேவையாளர் அல்லது முகவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் செயல் எதற்காகவும் அவருக்கெதிராக,

எடுபடற்குரியதாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் சபையினால் அல்லது சபைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட வழக்கு அல்லது குற்ற வழக்கு எதிலும் சபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவு சபையின் நிதிகளிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, ஏதேனுமத்தகைய வழக்கில் அல்லது குற்றவழக்கில் சபைக்குக் கொடுக்கப்பட்ட அல்லது சபையினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுகள் சபையின் நிதிகளில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையினது பணிப்பின் மீது அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் நீதிமன்றம் எதன்முன்னரும் அவருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட வழக்கு அல்லது குற்ற வழக்கு எதிலும் ஓராமுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதின், அத்தகைய செலவு அவரினால் அத்தகைய வழக்கில் அல்லது குற்றவழக்கில் அறவிடப்பட்டாலொழிய, சபையின் நிதிகளிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும்.

சபையின் உறுப்பினருக்கு எதிராகவோ அவரின் ஆதனத்திற்கு எதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

**95.** சபைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் வழக்கு எதிலும் சபையின் உறுப்பினருக்கெதிராகவோ, அவரின் ஆதனத்திற்கெதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

குடியரசுக்குரிய காணியைச் சபைக்கு விசேடமாக வழங்கல் அல்லது குத்தகைக்கு விடல்.

**96.** குடியரசுக்குரிய ஏதேனும் அசைவற்ற ஆதனமானது சபையின் நோக்கங்களுக்குத் தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனம் விசேடமாக வழங்கப்படக்கூடிய அல்லது குத்தகைக்கு விடப்படக்கூடிய ஒரு நோக்கமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அதற்கு அமைய அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் சபைக்கு அத்தகைய ஆதனத்தை விசேடமாக வழங்கலுக்கும் அல்லது குத்தகைக்கு விடலுக்கும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

சபையின் நீர்ச் சேவை தம்பிதமாகச் செய்வதற்கான தண்டனை

**97.** (1) சபையினால் வழங்கப்படும் ஏதேனும் நீர்வழங்கல் அல்லது சாக்கடைச் சேவையினைத் தம்பிதமாக்கும் அல்லது அது தம்பிதமாகக்கூடிய செயல் எதனையும் ஆள் ஒருவர் சட்டவிரோதமாகவும் தியவெண்ணத்துடனும் செய்யின், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவின் கீழான தவறொன்றைப் புரிவதில் வேறு யாரேனுமாளுக்கு உதவும் அல்லது உடந்தையாயிருக்கும் ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) ஓராமுட்பிரிவின் கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் தவறென்றிற்குக் குற்றவாளியாகும் ஆள் ஒவ்வொருவரும், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதும் ஏழு ஆண்டுகளுக்கு மிகாத ஒரு காலத்திற்குக் கடூழியச் சிறைத் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(4) 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும், ஓராமுட்பிரிவின் கீழான அல்லது இரண்டாமுட்பிரிவின் கீழான தவறெவ்வொன்றும் அச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் ஆளொருவரைப் பிடியாணையின்றிக் கைது செய்யத்தக்க தவறென்றுதல் வேண்டும்.

98. சபையானது இச்சட்டத்தின் கீழ் விதிகள் ஆக்கப்படத் தேவைப்படுத்தப்பட்டுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சரின் அங்கீகாரத்துடன் விதிகளை ஆக்கலாம்.

*இச்சட்டத்தின்கீழ் விதிகளை ஆக்கச் சபைக்குள்ள தத்துவம்.*

99. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையே ஏதேனும் முரண் அல்லது இசைவின்மை தோன்றுமிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய முரணின் அல்லது இசைவின்மையின் அளவுக்கு அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளிலும் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*இச்சட்டம் ஏனைய எழுத்திலான சட்டங்களிலும் மேலோங்கி நிற்றல்.*

*பொருள் கோடல்.*

100. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தி நின்றாலன்றி—

"அதிகார இடப்பரப்பு" என்பது, 15 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் வெளியிடப்பட்டு, அப்போதைக்கு வலுவிலிருக்கும் கட்டளைமூலம் சபையின் அதிகார இடப்பரப்பென வெளிப்படுத்தப்பட்ட இலங்கையின் ஏதேனும் இடப்பரப்பு என்று பொருளாகும் ;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகர சபை, நகர சபை, பட்டினசபை, அல்லது கிராமச்சபை என்று பொருளாகும் ;

"உள்ளூராட்சிச்சேவை ஆணைக்குழு" என்பது, 1969 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்திலுள்ள அதே பொருளையுடையதாகும் ;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது கடன், நன்கொடை, அல்லது வேறுவகையில் அரசாங்கத்தினால் முற்றாக அல்லது பகுதியளவாக ஏற்பாடுசெய்யப்பட்ட மூலதனம் கொண்டு கம்பனிகள் கட்டளைச்சட்டம் தவிர்ந்த எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்;

" சாக்கடை அமைப்புக்கள் " என்பது, கட்டிடங்களின் கழிவு நீரையகற்றுவதற்கெனப் பயன்படுத்தப்படும் சாக்கடைகள், துணையமைப்புக்கள், அவற்றோடு தொடர்புபட்ட மற்றெல்லா வேலைகள் என்பனவற்றையும் எல்லாச் சாக்கடைக் கழிவுப் பொருள் ஒழித்தற்கான வேலைப்பாடுகளையும் உள்ளடக்கும் ; ஆனால் தரை மட்ட வடிகால்களையும் மழைநீர் வடிகால்களையும், ஒரே வதிவிடப்பாப்பிலுள்ள கட்டிடத்தில் நீர் ஓடற்குப் பயன் படுத்தப்படும் வாய்க்கால்களையும் அல்லது சாக்கடைகளையும் உள்ளடக்காது ;

" நீர்வேலைகள் " என்பது, எல்லா நீர்வழங்கல் வேலைகளையும் பரிகரிப்பு வேலைகளையும் உள்ளடக்குவதோடு, குடிதண்ணீரின் பாதுகாப்பிற்கும் வழங்கலுக்கும் பயன்படுத்தப் படும் நீர் செல் பெருங்குழாய்கள், பகிர்ந்தளிக்கும் பெருங்குழாய்கள், அவற்றோடுறவுபட்ட மற்றும் எல்லா வேலைகள் என்பவற்றையும் உள்ளடக்கும்.